முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: ௬ | 11—1௨—௬9 வெள்ளி | ஒலி: ௪௨

"வீட்டுக்கு வந்துள்ள மருமகளிடம் (பொறுப்பேற்றுள்ள தி. மு. கழகத்திடம்) கொடுமைக்கார மாமியாராக அதிகாரம் படைத்த காங்கிரஸ் சர்க்கார் நடந்துகொண்டால் விஷயம் வெளியே தெரிந்து ஊர் சிரிக்கும்!" என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

"உலகப் பாட்டாளி மக்களே! ஒன்று சேருங்கள்!"

என்ற மூல முழக்கத்தின் பிதா...

61.

மனிதனின் கதை

பி.சி. கணேசன்

பொருளியல் மேதை மார்க்ஸ்

அன்புள்ள மாதவி,

தொழிற் புரட்சியால் உருவான புதிய சூழ்நிலையில் தோன்றிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஒப்பற்ற பொருளியல் மேதை கார்ல் மார்க்ஸ் மனித சமுதாயத்தில் நிலவிவந்த பொருளாதார நிலையைப் புள்ளிவிவரங்களோடு ஆராய்ந்து, சோஷலிசத் தத்துவத்தை விஞ்ஞான ரீதியில் வரையறுத்து, உலகத் தொழிலாளர்களிடையே கம்யூனிசக் கொள்கைகளால் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய சிந்தனையின் இமயம் அவர். வேறெந்தப் பொருளியல் மேதையும் தனது தத்துவத்தினுல் உலகப்போக்கை மார்க்ஸ் மாற்றிய அளவுக்கு மாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1818-ம் ஆண்டு மே மாதம் 5-ம் நாள் ஜெர்மனியில் வாழ்ந்த யூத வழக்கறிஞர் ஒருவரின் மகனுக மார்க்ஸ் பிறந்தார். பிறந்த இனமோ, கொஞ்ச காலம் வரை அவர் தழுவிய மதமோ அவருடைய சிந்தனையின் போக்கில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. பதினேழாம் வயதில் பான் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சட்டம் பயின்ருர். பிறகு பெர்லின் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ருர். இந்தச் சமயத்தில் சீமான் வீட்டில் பிறந்த ஜென்னி என்ற பெண்ணின் மீது மார்க்சுக்குக் காதல் தோன்றியது. கரடுமுரடான காதல் பாதையில் பல தொல்லைகளை அனுபவித்த பிறகு, ஜென்னியின் வருங்காலத்துக் கணவராக மார்க்சை அவளுடைய பெற்ருேர்கள் ஒப்புக்கொண்டனர். பொருளாதாரப் பேரறிஞராகப் பிற்காலத்தில் திகழ்ந்த மார்க்ஸ், இலக்கிய மணம் நிரம்பிய ஏராளமான காதல் கவிதைகளை, ஜென்னியைப் பற்றி யாத்தார். 1841-ல்! அக்கவிதைகளில் பல பெர்லின் பத்திரிகையொன்றில் பிரசுரமாயிற்று. பொருளாதார நிபுணர் கவிஞராகவே முதலில் அறிமுகமானுர்! அதே ஆண்டில் தத்துவத்துறையில் டாக்டர் என்ற பட்டமும் பெற்ருர். அறிவு வளர வளர மதத்திடையே அவர் கொண்ட வெறுப்புணர்ச்சியும் வளரலாயிற்று.

மார்க்ஸ் எழுதிய புரட்சிகரமான கட்டுரைகள பல ஜெர்மன் பத்திரிகைகளில் வெளிவரலாயிற்று. அவர் ஒரு பத்திரிகையும் நடத்தினர். அவருடைய புரட்சிக் கருத்துக்கள் ஜெர்மானிய வேந்தர்களை அச்சுறுத்தின. எங்கே தன்னை சிறைப்படுத்தி விடுவார்களோ எனப் பயந்த மார்க்ஸ் ஜெர்மனியை விட்டு வெளியேறினர். பிரான்சுக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே அவருக்கு ஏஞ்சல்ஸ் என்ற ஜெர்மானியர் ஒருவருடைய நட்புக் கிடைத்தது. ஏஞ்சல்ஸ் ஒரு பருத்தி உற்பத்தியாளருடைய மகன. இங்கிலாந்தில் அவருக்குத் தொழில் உடைமைகள் இருந்தன. ஏஞ்சல்சுக்கும் மார்க்சுக்குமிடையே ஏற்பட்ட நட்பு வாழ்நாள் முழுவதும் நீடித்தது. இருவருமாகச் சேர்ந்துதான் உலகத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யையும், 'மூலதனம்' என்ற நூலையும் வெளியிட்டனர். ஆரம்பத்தில் ஏஞ்சல்ஸ், சமுதாயச் சீர்திருத்தவாதியான ராபர்ட் ஓவன் என்பாரின் கருத்துக்களால் பெரிதும் கவரப்பட்டிருந்தார். மார்க்சைச் சந்தித்த பின அவருடைய எண்ணங்கள் புதுப் பாதையில் திரும்பின.

மார்க்சின் துன்பங்கள் எங்கு சென்ருலும் அவரை நிழல்போல் தொடர்ந்தன. பிரான்சிலிருந்து மார்க்ஸ் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆதரவற்ருேருக்கெல்லாம் அடைக்கலம் அளிக்கும் லண்டன் நகரம் மார்க்சையும் ஏற்றுக் கொண்டது. அவர் லண்டனில் வாழ்ந்த காலம் அவருடைய வாழ்க்கையில் மிகவும் பயனுள்ள காலம். லண்டன் மியூசிய நூல் நிலையத்தில் அமர்ந்து காலையிலிருந்து மாலை வரை மார்க்ஸ் எண்ணற்ற நூல்களைப் படித்தார். படித்த நூல்களிலிருந்து ஏராளமான குறிப்புக்களை சேகரித்துக் கொள்ளுவார். நாள் முழுவதும் இப்படிக் கழித்தபின் இரவு தன்னுடைய இல்லம் சென்று, பகலில் சேகரித்த குறிப்புக்களை முறைப்படி ஒழுங்குபடுத்திக் கொள்ளுவார்.

இப்படி அவர் ஆண்டு பல உழைத்துச் சேகரித்த அரிய குறிப்புக்களிலிருந்து உருவான சிந்தனையின் சாரம்தான் 'மூலதனம்' என்ற நூலாகும். லண்டனில் வாழ்ந்தபொழுது கொடிய வறுமையால் அவர் மிகவும் கஷ்டப்பட்டார். அன்பு மனைவி ஜென்னியின் இன்முகமும், ஏஞ்சல்ஸ் அவ்வப்பொழுது செய்து வந்த பொருளுதவியுமே மார்க்சுக்குப் பெரும்பலமாக விளங்கின. ஆறு குழந்தைகளையும், மனைவியையும் வைத்துப் பாதுகாக்க வசதியின்றி அல்லல்பட்டார். 'செஸ்' விளையாடுவதில் மார்க்சுக்குப் பெரும் விருப்பம் உண்டு. உண்மையுள்ள குடும்பத் தாதி ஒருத்தி ஜென்னிக்குத் துணையாக இருந்தாள். அவளோடு 'செஸ்' விளையாடுவதில் மார்க்ஸ் பெரும் இன்பம் கண்டார்.

உலகுக்குப் புதிய பொருளியல் அரசியல் தத்துவத்தைத் தந்த மேதை 1883-ம் ஆண்டு, மார்ச் மாதம் 14ஆம் நாள் அவர் எழுதிச் சென்ற கோட்பாடுகளும், அதன் விளைவாகத் தொழிலாளர் விழிப்பும் இன்றும் உலகத்தை இரு பெரும் முகாம்களாய் பிரித்து வைத்திருப்பது நீ அறிந்ததே. உலகில் ஒரு பெரிய கருத்துப் போராட்டம் ஏற்படும் வகையில் அவர் என்ன சொன்னர் என்பதை நீ அறிவது மிகவும் அவசியம்.

'மூலதனம்' என்ற அவருடைய நூலில் உலகில் ஏற்பட்டிருக்கும் புதிய சூழ்நிலையையும், அதனுல் ஏற்படவிருக்கும் விளைவுகளையும், அவ்விளைவு முடிவில் எப்படிப்பட்ட சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் என்பதையும் மார்க்ஸ் தெளிவாக ஆராய்ந்து சில முடிவுகளை வெளியிட்டிருக்கிருர். தொழிற் புரட்சியின் விளைவாகவும் இயந்திரப் பெருக்கங்களினுலும் பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையே உள்ள பேதம் அதிகரித்துக் கொண்டே போகும். முதலாளிகள் உழைக்காமலே தொழிலாளர்களின் உழைப்பால் கிடைக்கும் ஊதியத்தை ஏகபோகமாக அனுபவிக்கும் வாய்ப்பேற்படும். செல்வம் சிலரிடத்தில் போய்க் குவியும். அவர்கள் தொழிலாளர்களை மேலும் மேலும் சுரண்டுவார்கள். இந்த நிலையைப் பொறுத்துக்கொண்டு தொழிலாளர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே போராட்டம் ஏற்படும். இதை வர்க்கப் போராட்டம் என்று மார்க்ஸ் அழைக்கிருர். இந்த வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதது. ஏனென்ருல் எந்தக் காலத்திலும் பணக்காரர்கள் தங்களுடைய மூலதனத்தை இழக்க இஷ்டப்பட மாட்டார்கள். இதனுல் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை நிலைநிறுத்தப் பலாத்காரப் புரட்சிகளில் ஈடுபடவேண்டியிருக்கும். அதன் விளைவாக தொழிலாளர்களின் சர்வாதிகாரம் ஆட்சியில் அமரும். பணக்காரர்களிடமிருந்து கிடைத்த மூலதனத்தைத் தொழிலாளர்கள் தங்களுக்குள்ளே பங்கு போட்டுக்கொள்ளமாட்டார்கள். உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும். தொழிலாளர்களுக்கு அரசாங்கமே ஊதியம் வழங்கும். மார்க்சின் இந்தக் கோட்பாடே 'விஞ்ஞான சோஷலிசம்' என்றும் 'கம்யூனிசம்' எனறும் அழைக்கப்படுகிறது.

மார்க்சின் கொள்கைப்படி கம்யூனிச சமுதாயம் அமையப் பலாத்காரம் இன்றியமையாதது. கம்யூனிசம் என்ற குழந்தை சுகமாகப் பிரசவம் ஆக பலாத்காரம் என்ற தாதி தேவைப்படுகிருள் என்று மார்க்ஸ் குறிப்பிடுகிருர். முதலாளித்வம் தன்னை அழித்துக் கொள்ளும் கருவை தன்னிடத்தே கொண்டுள்ளது என்பது மார்க்சின் நம்பிக்கை. முதலாளித்வம் முடிவில் அழிந்து கம்யூனிசம் நிலைபெறப் போவது இயற்கையின் நியதி என மார்க்ஸ் நம்பினுலும், அந்த நிலை ஏற்படும் வரை காத்திருக்கத் தேவையில்லையென்றும், உலகம் எங்கணும் உள்ள தொழிலாளர்கள் ஒன்றுபட்டு பலாத்காரப் புரட்சியின் மூலம் அந்த நிலையை சீக்கிரம் உண்டாக்கப் பாடுபட வேண்டும் என்றும் மார்க்ஸ் குறிப்பிடுகிருர். 'உலகில் தோன்றும் ஒவ்வொரு கருத்தும் தனக்கு எதிர்மறையான ஒரு கருத்தைத் தோற்றுவிக்கிறது; அதனுல் இரண்டு கருத்துக்களுக்குமிடையே போராட்டம் தோன்றுவதன் விளைவாகப் புதிய, அதைவிடத் தெளிவான கருத்து பிறக்கிறது!' என்ற ஹெகல் என்பாரின் சித்தாந்தத்தைப் பொருளியல் துறைக்கு மார்க்ஸ் ஈடுபடுத்தியே 'கம்யூனிஸ்ட் அறிக்கை'யைத் தயாரித்தார். கொள்கைகளைக் கூறியதோடு அல்லாமல், அதை நடைமுறையில் செயல்படுத்த 1847-ல் லண்டன் நகரில் 'தொழிலாளர் காங்கிரஸ்' ஒன்றைக் கூட்டினர். அந்த அறிக்கை பிரஞ்சுப் புரட்சியின் போக்கை ஆராய்ந்த பின், பிரஞ்சுப் புரட்சியில் எழுப்பப்

[தொடர்ச்சி பக்கம்—10]

19—12—'59 முதல் வெளிவருகிறது!

சுவைமிக்க கற்பனைகள்!
சூடான அரசியல் கருத்துக்கள்!
அன்ருட அரசியலின் ஆராய்ச்சி அரங்கு!
தி. மு. க. அணிவகுப்பில் முரசு கொட்டும் பொன்னேடு

தாய் நாடு

ஆசிரியர்: T.K. சீனிவாசன்

(தி. மு. க. வார ஏடு)

விலை 16 புதியகாசு | ஆண்டு சந்தா ரூ. 8 | அரை ஆண்டு சந்தா ரூ. 4

முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் விண்ணப்பிக்கவும்

'தாய்நாடு' அலுவலகம். சென்னை—14.

வெள்ளி 11—12—59 சென்னை

திறந்த வாயில்!

ஒரு நாடு சீரழிந்து—சிறப்பிழந்து — மாற்றார்கண்டு நகைக்கத் தக்க அளவுக்கு உலகத்தின் கேலிப் பொருளாக மாறுவதற்கு வழிகள் அநேகம் இருக்கின்றன; அவற்றில் ஒன்றுதான் அந்த நாடு 'திறந்த வாயி'லாகி விடுவது! எவர் வேண்டுமானாலும் நுழையலாம் என்கிற அளவுக்கு நிலைமை இருந்தால், நாமே எப்படி வேண்டுமானாலும் குலைந்து போகும் என்பதை நிச்சயம் எதிர்பார்க்கலாம்!

தேனைக் காக்க தேனீ உண்டு; தாழம்பூவைக் காக்க முள் உண்டு; வீட்டைக் காக்க நாய் உண்டு; ஆனால் நாட்டைக் காக்க நாதியில்லையோ — என்ற கேள்விதான் இந்திய உபகண்டத்தைப் பொறுத்தவரையில் இன்று எழுகிறது!

இங்கே கண்ணுக்குத் தெரிந்து நுழைபவர்களே எந்தக் கருத்துடன் வருகிறார்கள் என்பதை ஆளுபவர்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்களது ராஜதந்திரம் அந்த அளவுக்குப் பழுதுபட்டிருக்கின்ற காரணத்தால்தான், இன்று எதிர்பாராத குழப்பங்கள் இந்திய—சீன எல்லையிலே ஏற்பட்டிருக்கின்றன. சீனர்களின் சிரிப்புக்குள்ளே புதைந்து கிடந்த ஆக்கிரமிப்புப் பேராசையை—கைலாகு கொடுத்த கரங்களிலே பதுக்கப்பட்டிருந்த துப்பாக்கிக் குண்டுகளை உணர்ந்துகொள்ள முடியாதவர் நமது தலைமையமைச்சர் நேரு. அதன் காரணமாகவே லடாக்கிலே வேட்டு சப்தம் கேட்டது; பதினேழு காவல் வீரர்கள் பிணங்களாகத் திரும்பிவந்தார்கள்!

கண்ணுக்குத் தெரிந்து நுழைபவர்களாலேயே இத்தனை கேடுகள் விளைகின்றன என்றால், தெரியாமல் வந்தவர்களால்—மறைவாகத் திரிபவர்களால் ஏற்படக்கூடிய தொல்லைகள் ஏராளமாகத்தானே இருக்கும்?

ஒரு நல்ல நாடு தன் ஆட்சிக்கும், நம்பியிருக்கின்ற மக்களுக்கும் எவ்வித அபாயமும் வராமல் தடுக்கிறது என்றால், எல்லையிலே கவனம் வைத்திருக்க வேண்டும்; ஆனால், இந்திய அரசு விழிகளை மூடிக்கொண்டிருக்கிறது — விபரீதத்தை விலை கொடுத்து வாங்குகிறது என்பதற்கான ஆதாரங்கள்தான் இப்போது கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

இந்தியாவில் எத்தனை சீனர்கள் இப்போது வாழ்ந்து வருகிறார்கள் என்று பாராளுமன்றத்திலே சமீபத்தில் கேள்வி ஒன்று கேட்கப்பட்டது. அப்போது உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் 11,492 சீனர்கள் வசிப்பதாக சுத்தமாகக் கணக்குக் கொடுத்தார்.

இந்தக் கணக்கு 'கண்மூடி'களின் பொறுப்பற்ற புள்ளிவிபரம் என்பதை வெளிப்படுத்தும் திடுக்கிடத்தக்க உண்மைகள் இப்போது கிடைக்கின்றன. கல்கத்தாவில் மட்டும் தற்சமயம் 30,000 சீனர்களுக்கு மேலாக வசிப்பதாகச் செய்திகள் கிடைக்கின்றன. கல்கத்தாவில் மட்டும் அவ்வளவு பெரும் தொகையினர் என்றால் இந்தியா முழுவதிலும், டில்லி மூலபீடத்தின் கணக்கேட்டிலே கரியைப் பூசிய களிப்புடன் நடமாடிக் கொண்டிருக்கும் சீனர்கள் எத்தனை இலட்சங்களோ; யார் கண்டது? போரா; அல்லது பேச்சிலே முடிவா—என்று இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற குழப்பச் சூழ்நிலைகளுக்கு அப்படி வசிப்பவர்களும் காரணமாக இருக்க முடியாது என்பது என்ன உறுதி? அவர்களில் எத்தனை பேர் இந்திய—சீன உறவை விரும்புபவர்களோ; எத்தனை பேர் ஒற்றர்களோ?

இவர்களைப் பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்திலே எழுப்பிய கேள்விக்குக் 'காந்தீய' பாணியிலே பதில் தந்திருக்கிறார், பந்த்.

"அப்படி ஒற்றர்களாகத் திரிபவர்கள் இங்கே இருந்தால், அவர்கள் அறிவு படைத்தவர்கள் அல்ல!"

—இது பதிலா? இதனால் அரசு செய்து வரும் மாபெரும் தவறை மறைத்துவிட முடியுமா? அவரது கொள்கைப்படியே 'அறிவுபடைக்காதவர்களால்' ஏற்படுகின்ற விளைவுகளைத் தடுத்துவிட முடியுமா?

குடியேறியவர்கள் ஒரு நாட்டின் நிம்மதியைக் குலைத்ததையும், சொந்த நாட்டுக்காரர்களை அடிமையாக்கி வைத்ததையும், சுய உணர்வு பெற்றவர்கள் உரிமையைப் பெற போராட்டங்கள் தேவைப்படுகின்றன—என்பதையும் வரலாற்றில் காணுகிறோம். வெள்ளைக்காரர்களின் நுழைவால், அமெரிக்க செவ்விந்தியர்கள் உரிமையற்றுத் தவித்தார்கள்; ஆப்பிரிக்கக் காடுகளில் வசித்துவந்த பூர்வ குடிகள் ஐரோப்பிய நாடுகளின் காலனி ஆதிக்கத்தில் சிக்கிக் கிடந்தார்கள்; விடுதலைக்குப் போராடி, வெற்றியும் பெற்று வருகிறார்கள்!

இதிலிருந்து இன்று உலகம் கற்ற படிப்பினை, வேற்று நாட்டுக்காரர்களின் நுழைவை ஒரு நாடு கவனித்திருக்க வேண்டும்; கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதே. அவர்களால் அமைதி பாழாகும்; ஆபத்து ஏற்படும் என்பது கட்டாயமில்லை என்றாலும் அரசின் பொறுப்பாகும் அது!

சீனர்களைப் பொறுத்தவரை அவர்களது நுழைவால்—கணக்கின்றி குடியேறிய காரணத்தால் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்ட நாடுகள் சில இருக்கின்றன. கொரியா, வியட்நாம், கம்போடியா, இந்தோனேஷியா—போன்ற நாடுகள் மிகையான சீனர்களின் நுழைவால் தொல்லைகளைச் சந்தித்திருக்கின்றன என்கின்றனர், உலக விமர்சகர்கள். அதுபோலே இந்தோனேஷியாவில் வாழும் சீனர்களின்மேல் இன்று கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சில குறிப்பிட்ட இடங்களில்தான் அவர்கள் வசிக்க வேண்டும் என்றெல்லாம் தடைகள் விதிக்கப்படுகின்றன.

அதுபோலவே இந்தியத் துணைக்கண்டத்திலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதல்ல அவசியம். இங்கு வசிக்கின்ற சீனர்கள் அனைவரையும் பிடிக்க வேண்டும்; நாடுகடத்த வேண்டும்---என்றும் ஆலோசனை கூறவில்லை. அவர்கள் எப்படி வந்தார்கள்; எத்தனை பேர் இருக்கிறார்கள்---என்பதையாவது ஒரு அரசு கவனிக்க வேண்டாமா? ஊழல் நிறைந்த கணக்கைக் காட்டுவதால் என்ன லாபம்?

சீனர்களால் இந்த நாடு சூறையாடப்படும் என்ற அச்சுறுத்தல் எங்கிருந்தும் கிளம்பவில்லை; ஆனால், அமைதிக்குப் பங்கமேற்படும் என்று நேபாளத்திலேயிருந்து அபாயக்குறி காட்டப்படுகிறது. நேபாள அரசுக்கும், இந்திய அரசுக்கும் இன்று நிலவிவருகின்ற ஒற்றுமையைக் குலைக்க அங்கேயும் கணக்கின்றி நுழைகின்ற சீனர்கள் வழி வகுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழும்புகிறது.

"நேபாளத்தின் வட எல்லை ஓரத்திலுள்ள எவரஸ்ட் பகுதிக்குள்ளும், ஷெர்பா வட்டாரத்துக்குள்ளும் சீனர்களின் கையாட்கள் மாறுவேடத்தில் நுழைகின்றனர். அவர்களால் நேபாளத்தின் வட பகுதியில் நெருக்கடியானதொரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது."

—நேபாளத்தை ஆளும் கட்சியான நேபாள காங்கிரசின் பாராளுமன்றக் கட்சிக் கொறடா இப்படி அறிக்கை விட்டிருக்கிறார்.

"ஒரு காரணமும் இல்லாமல் இவ்வளவு பேர்கள் அங்கே உலவிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஏற்கவே முடியாது. இன்று அதிகமாக சீனர்கள் வசித்துவருகின்ற ஷெர்பா பகுதியும் இன்னும் சில வட்டாரங்களும் திபேத்தைச் சேர்ந்தவை என்று சீனா முன்பே உரிமை கொண்டாடியது. ஆகவே, இன்றைய நிலை விபரீதமாகலாம். இந்திய—சீன எல்லைத் தகராறு நேபாளத்திற்கும் ஒரு சாபக்கேடாகலாம்! இதை உணராது 'நேபாளத்திற்கு எங்கிருந்தும் ஆபத்தில்லை' என்று பண்டித நேரு கூறியிருப்பது மிகவும் வியப்பையும், வேடிக்கையையும் தருகிறது!"

---வருமுன் உணராத இந்திய அரசின் கவனக் குறைவை நேபாள சர்க்கார் விளக்குகிறது. நேபாளத்திற்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள உறவை முறிக்க சீனர்கள் சதி செய்கிறார்கள் என்றும் குற்றம் சாட்டுகிறது!

அவர்களது கவனத்தில் ஒரு துளியும் இந்திய உள்நாட்டிலாக்காவுக்கு இல்லை!

இங்கிருந்து வேற்று நாடு செல்பவர்களை மட்டும் குத்திக் குத்தி கேள்வி கேட்கிறது, இந்திய அரசு! இந்த மண்ணைவிட்டு வெளியேறுதிருக்க முடிந்தவரை சதி செய்கிறது! திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடுக்கிறது. இயக்கத்தின் முன்னணி வீரர்களான மதியழகன், வழக்கறிஞர் தில்லை-வில்லாளன் போன்ற தோழர்கள் செல்வதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறது! ஆனால், வெளியிலிருந்து நுழைபவர்களின்மேல் இந்தக் கவனத்தைக் காணோம் என்பது மிகவும் வெட்கக் கேடானது.

அதனால், வெளிநாட்டிலிருந்து வருபவர்களையோ---அல்லது சீனர்களையோ புறக்கணிக்க வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை!

வந்தவரை வரவேற்பீர்; ஆனால் இச்சைபோல் நுழைவதைத் தடுப்பீர்! நாட்டைத் 'திறந்த வாயி'லாக்காதீர்!

ஃ

சுழல் விளக்கு

மாஹமி

துரைக்கண்ணன்; மேலூர்.

(?) கோயபல்ஸ் என்பவன் யார்?

ஹிட்லர் நிறுவிய ஏகாதிபத்தியத்தின் பிரச்சார பீரங்கி. பொய்யும், புளுகும், புனைசுருட்டும், புவியோர் மயங்கிடும் திடீர் சேதிகளும் தருவதில் பெயர் பெற்றவன், நம காங்கிரஸ் பிரச்சார பீரங்கிகளைப்போல!

வடிவேலன்; சத்திரப்பட்டி.

(?) 'திராவிடம்' என்ற சொல்லுக்கு மறுபடியும் எதிர்ப்புக் காட்டத் துணிந்திருக்கின்றனராமே சிலர்?

முன்பு இதே எதிர்ப்புக்காட்டி மூக்குடைபட்டவர்கள்தாமே அவர்கள்? அடிபட்ட மூக்கு இப்போது நிமிர்ந்திருக்கும்; எனவே மறுபடியும் வருகிறார்கள் மல்லுக்கு.

பார்த்திபன்; சோமனூர்.

(?) ஆச்சாரியார் இனி வாரிசு தேடுவாரா?

அரசியலில்தானே! கண்டிப்பாகத் தேடுவார். ஏனெனில், லட்ச லட்சமாகக் குவிகிறதே பணம்! ஆனால் பரிதாபத்துக்குரிய சுதந்திரக் கட்சியில் 'அவர்' போல் ஒருவர் கிடையாதே!

அபுபக்கர்; குன்னூர்.

(?) வாழ்க்கை யாருக்கு இனிமையாயிருக்கும்?

மேதைகளுக்கு! ஏனெனில் அவர்கள் நட்டத்தை லாபம் எனக் கருதுகிறார்கள்; லாபத்தை நட்டமெனக் கருதுகிறார்கள்.

செல்லத்துரை, தேவன்குளம்.

(?) காமராசர் கனவெல்லாம் நனவானால் எப்படியிருக்கும்?

இந்தியாவின் பிரதம மந்திரி பீடத்தில் அவர் இருப்பார். அவரது ஆட்கள்தாம் அவரைச் சுற்றி இருப்பார்கள். மாநிலங்களிலெல்லாம் பதவிக்கு வருபவர்களுக்குப் பட்டமோ படிப்போ தேவையில்லை என்ற சட்டம் அமுலுக்குவரும். அதைவிட முக்கியமாக, முதன்முதல் 'தொல்லை பிடித்த தேர்தலே இனிக் கிடையாது' என்று அறிவித்து விடுவார்.

தமிழரசன்; ஒண்டிப்புதூர்.

(?) சென்னையை அழகுபடுத்துபவை எவை?

மெரினா கடற்கரை, ஆயுள் இன்ஷியூரன்ஸ் கட்டிடம், 18 லட்சம் 'மக்கள்' மக்கள் வரிப்பணத்தில் உண்டு உறங்கி உல்லாச வாழ்வு வாழும் கவர்னர்பெருமானின் தோட்டம்!

அ. சிராஜுலு; மயிலை.

(?) சினிமாவில் புதுமுகம் பழைய முகம் ஆவது போல் அரசியலில் உண்டா?

ஏனில்லை; இந்திராகாந்தி இருக்கிறாரே?

தியா. ஜெயராமன்; திருச்சேறை.

(?) தமிழகத்துக் காங்கிரசார் காமராசரைத் தெய்வம்போல் கொண்டாடுவது ஏன்?

பக்தன் பரமனைத் தொழுது வேண்டுவது வரத்திற்காக; இவர்கள் அவரைக் கொண்டாடி வேண்டுவது பதவி வரத்திற்கு.

மாணிக்கம்; விழுப்புரம்.

(?) இரண்டரை லட்சம் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி தரத் திட்டம் தீட்டியிருக்கிறார்களாமே?

திட்டம்தானே தீட்டியிருக்கிறார்கள். இனி அது நடைமுறைக்கு வருவதற்குள் இளைஞர்கள் கிழவர்களாகிவிடுவார்கள்!

கிரீன்; திருப்பூர்.

(?) செவ்வாய், வெள்ளி கிரகங்களுக்கு போகப் புதுவழி கண்டுபிடித்திருக்கிறார்களாமே, ரஷ்ய நாட்டார்?

அவர்கள் அது கண்டுபிடிக்கிறார்கள். நம்மவர்கள் சிரங்கம் கோவிலில் சாமி எப்படி எரிந்து போயிற்று என்பதைக்கூட இன்னும் கண்டு பிடிக்காது, 'கடவுள் செயலுக்குக் காரணம் கண்டு பிடிப்பதா?' — என்று புலம்பி வருகிறார்கள்.

டி. வி. ராசன், அரக்கோணம்.

(?) சென்னையில் அகில இந்திய எழுத்தாளர் மாநாடாமே?

ஆம்; அப்போது பாருங்கள் நம் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளின் முகத்தை! 'வௌவால்' மொழியிலும், வெளிநாட்டு மொழியிலும் வந்தவர்கள் உளறுவார்கள்; இவர்கள் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள்: அல்லது எடுபிடி வேலை செய்ய இங்குமங்கும் ஓடிக்கொண்டிருப்பார்கள்.

சீ. பஞ்சநாதன், திண்டுக்கல்.

(?) இந்திய காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் குழப்பமாமே?

குழப்பமில்லாமலா இருக்கும் தோழரே? தென் நாட்டவர்—அதுவும் கொஞ்சம் இரும்பு மனம் படைத்தவர் தங்களை ஆள வருகிறார்—என்றால் வடவர் கோட்டையில் குழப்பமில்லாமலா இருக்கும்? குழப்பம் முற்றி 'அரக்குமாளிகை'யில் சஞ்சீவ ரெட்டியைத் தள்ளவும் தயங்க மாட்டார்கள் வடவர்கள்!

இராமசாமி; லாலாபேட்டை.

(?) எல்லாவற்றிற்கும் வடக்கு நோக்கி ஓடும் நிலைமை ஏன்—என்று கேட்டாராமே சின்ன துரை, சட்டசபையில்?

ஆமாம், ஒரு நாள் எல்லோரும் இந்தக் கேள்வியைத்தானே கேட்டாகவேண்டும்?

ராமதாசன்; சென்னை - 3.

(?) உலகத்திலேயே மிகமிகச் சிறிய, ஆனால் சுதந்திரமான நாடு எது?

மொனாகோ. அந்த நாட்டின் பரப்பளவு எவ்வளவு தெரியுமா? எட்டு சதுர மைல்கள்தான்!

பீர்முகமது; கடலூர்.

(?) கேரளாவில் மீண்டும் தேர்தலாமே, யார் வெற்றி பெறுவார்கள்?

காங்கிரசின் பணக்காரக் கூட்டு முன்னணி வெற்றிபெற்றால் ஆச்சரியப்படத் தேவையில்லை. கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றால் அத்தனை பிற்போக்குப் பிண்டங்களையும் எதிர்த்து வெற்றிபெற்றிருக்கிறார்களே என்று ஆச்சரியப்பட வேண்டியிருக்கும்! இந்த இரண்டுடனும் சேராது நிற்கும் புரட்சிகர சோஷலிஷ்ட் கட்சி அதிக வெற்றிபெற்றால் கேரள மக்கள் அரசியலில் விளையாடுகிறார்கள் என்று பொருள்!

சுசீலா; பேரூர்.

(?) இந்நாட்டு ஏழைப் பெண்களின் கண்ணீர் எப்போது அதிகமாக சிந்தப்படுகிறது?

ஒழுக்கம் தவறியபோது. அதைவிட ஆணின் கொடுமையைப் பொறுக்க மாட்டாமல் வடிக்கப்படும் கண்ணீரே அதிகம்.

சுப்ரி; நாமநாயக்கன்பட்டி.

(?) மைசூரில் துப்பாக்கிப் பிரயோகமா?

ஆமாம்: கொடி தினம் கொண்டாடப் போகிறார்களல்லவா, அந்தக் கொடிச் சீலையை நனைத்தெடுக்கும் அளவிற்கு இரத்தத்தை அங்கு தேக்கியிருக்கிறார்கள்!

நாச்சிமுத்து; கொல்லம்.

(?) ஜனசங்கம் கேரளாவில் தேர்தலுக்கு நிற்கிறதாமே?

அழுக்கிருக்கிற பக்கம் தானே மூட்டைப்பூச்சி இருக்கும்? மதப் பற்றிருக்கிற பக்கம்தான் 'மத (மேறிய) வாதி'களுக்கு வேலை இருக்கும்?

சிவரத்னம்; பியார்தோட்டம்.

(?) இரத்தக் கொதிப்புக்குப் புதிய மருந்து கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதாமே?

தென்னாட்டின் விடுதலை இயக்கம் போராட்டம் நடத்துகிறபோது நேருப் பண்டிதருக்கு அதைப் 'போராட்டப் பரிசாக' அனுப்பி வைக்க உதவும். எனவே, அந்த மருந்தைப் பத்திரப்படுத்தி வையுங்கள் தோழரே.

பி. பலராமன்; தாராபுரம்.

(?) சஞ்சீவ ரெட்டி தலைமைப் பீடத்திற்குப் போய் விட்டாரே, இனி யார் ஆந்திரத்தின் குரலை டில்லிக்கு எடுத்தோதுவார்கள்?

கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ஆந்திரத்தைப் பொருத்தவரை 'எதிர்ப்புக் குரல்' எழுப்பும் சஞ்சீவ ரெட்டியார் பணியை ஆந்திர நிதியமைச்சர் பிரமானந்த ரெட்டி மேற்கொண்டிருக்கிறார்! ஆனால் இதுவரை நம் தமிழகத்தில் 'எதிர்ப்புக் குரல்' எழுப்பிய முதல்வருமில்லை; நிதியமைச்சருமில்லை!

(?) திராவிட விடுதலைக் கிளர்ச்சி எப்படியிருக்கும்?

ஆள்பவர் அடக்கம் கொண்டு நம்மை விளக்கம் கேட்டு, திராவிட விடுதலை பற்றிப் பேசித் தீர்த்தால் திராவிடக் குழந்தை 'சுகப் பிரசவம்' எடுக்கும்! இது நாம் விரும்புவது! அதிகார மலையின் ஆணவ முடியில் அமர்ந்து கொண்டு அடக்குமுறைப் பாறைகளை உருட்டி விட்டால், மக்களின் உள்ளத்தில் கோபப் புயல் வீசும்; எழுகின்ற மரண புழுதியில் ஆதிக்க மண்டபம் ஆட்டம் கொடுக்கும். ஆதிபத்யத்தின் முடியும் கோலும் முறிந்து வீழும்.

சின்னராசன்; கிருஷ்ணகிரி.

(?) வெள்ளைக்காரர்கள் அத்தனைபேரும் கறுப்புரை வெறுக்கும் நிற வெறியர்களா?

இல்லை. லண்டன் மாணவர்கள் கூட 'தென்னாப்பிரிக்க நிற வெறியர்களை' எதிர்க்கிறார்கள்! வெறும் வாயால் மட்டுமல்ல. அந்த நாட்டுப் பண்டங்களை வாங்குவதில்லை — என்ற நடவடிக்கையின் பேரில்.

பரமன்; திருவையாறு.

(?) எல்லாப் பண்டார சந்நிதிகளுமே ஸ்ரீயை ஆதரிக்கிறார்களா?

இல்லை. 'காசிவாசி'களும், தமிழ்ப் பற்றற்ற சிவ பக்தர்களும் 'ஸ்ரீ'—எனும் சேற்றில் விழுகின்றனர். தமிழ் படித்த சாமியார்கள் சிலர் ஆதரிக்கின்றனர். இந்த இரண்டுவகையினரைவிட 'சிவனே' என்று உண்டு உறங்கி திண்டு தலையணைகளில் சாய்ந்து கிடக்கும் பக்தர்களே அதிகம்!

ராசப்பா; கூடலூர்.

(?) 'குழந்தை பெறும் மனை'களின் வளர்ச்சி எப்படியிருக்கிறது?

மருத்துவமனைகளில், பொல்லாத இடநெருக்கடியில் பிள்ளை பெறுவதைக் காட்டிலும் ஓடும் ரயில் பெட்டிகளில் பெறுவது மிக நல்லது என்று முடிவெடுத்திருக்கிறார்கள், இந்நாட்டுத் தாய்மார்கள்! இந்தக் காருண்யர்களின் ஆட்சியிலே ரயில் பெட்டிகளில் குழந்தை பெறுவது அதிகரித்து வருகிறதாம்!

பிரகாசம்; செங்கம்.

(?) பொதுமக்களுக்கும் காங்கிரசிற்கும் எப்பேர்ப்பட்ட தொடர்பு இருக்கிறது?

'அந்தத் தொடர்பு' ஏற்படுத்தத்தானே மாவட்டத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் செலவழிக்க போகிறார்கள் காங்கிரசார்?

கூடல் நகரிலே கூடினர்!

சங்கத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரிலே சென்ற திங்கள் 29ம் நாள் மங்காத திராவிட இனவுணர்ச்சி கொண்ட காளையர் கூடினர். பாடப் புத்தகங்களை ஏந்தும் பருவத்தினர் தாம் என்றாலும், கூடல் நகரின் கவனத்தையே கவர்ந்திழுக்கும் வகையில் ஏ. வி. எஸ். எஸ். ரைஸ் மில் காம்பவுண்டில் மிகப் பெரிய அளவில் அழகு தேங்கும் பேராசிரியர் சண்முகம் பந்தலில் டாக்டர் தருமாம்பாள் அரங்கில் மதுரை மாவட்ட மாணவர் மாநாட்டை நடத்திக் காட்டினர்.

மாநாட்டின் நிகழ்ச்சிகள் காலை 10 மணியளவில் துவங்கின. தொடக்கத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கன் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவு டேப் ரிக்கார்டு மூலம் ஒலி பரப்பப்பட்டது.

மாநாட்டுச் செயலாளர் மாணவர் மாநாட்டை வாழ்த்தி வந்திருந்த வாழ்த்துக்களைப் படித்தார். திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்களிடமிருந்து வாழ்த்துக்கள் வந்திருந்தன.

வரவேற்புக் குழுத் தலைவர் இந்திரஜித் அனைவரையும் வரவேற்றார். தோழர் பி. எஸ். மணியம் பி. ஏ. அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்து, துவக்கவுரையாற்றினார். தோழர் கே. ஏ. கிருட்டினசாமி பி. ஏ. (ஆனர்ஸ்) தலைமை யேற்று உரையாற்றினர்.

இடைவேளையின்றி நடைபெற்ற இச்சிறப்பு மிகு மாநாட்டில் தோழர்கள் எஸ். டி. சோமசுந்தரம், கோவை, செழியன், டி. கே. பொன்னுவேலு, என். வி. என். சோமு, மலைச்சாமி, மா. பாண்டியன், தங்கப் பாண்டியன் பி. ஏ. பி. டி, அழகிரிசாமி, இ. கிருட்டிணன். இளவழகன், பாலு, டி. கே. கோபாலகிருட்டினன் எம். எஸ். வெங்கடாசலம் - எம். ஏ. ராசகுமார் பீட்டர் முதலியோர் தனித்தனி தலைப்புக்களில் பேசினர்.

அனுதாபத் தீர்மானங்களும், மாணவ உலகப் பிரச்சினைகள் பற்றிய முக்கியத் தீர்மானங்களும் நிறைவேறின வரவேற்புக் குழுத்தலைவரின் நன்றியுரையுடன் மாலை 5 மணியளவில் மாநாடு இனிய முடிவெய்தியது.

அல்ஜீரியாவில் நிரந்தரக் குமுறல் ; கிரீசில் பயமுறுத்தல்!

ஐக்கிய நாடுகள் சபையில் இப்போது அல்ஜீரியாவைப் பற்றி அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது. அல்ஜீரியா நாட்டுப் பிரதிநிதிகளும், பிரான்சின் பிரதிநிதிகளும் கூடிப்பேசி அல்ஜீரியாவுக்கு சுய நிர்ணய உரிமை வழங்குவதைப் பற்றி முடிவுகாண வேண்டும் என்று எல்லோரும் யோசனை சொல்கிறார்கள். இதற்கு ஆதரவு இருக்கிறது. இருந்தும் பேச்சு வார்த்தைகள் சாதகமாக நடக்குமா நடக்காதா என்ற விஷயத்தில்தான் அனைவருக்கும் சந்தேகம். ஏனெனில் வழக்கம்போல், ஐக்கிய நாடுகள் சபையில் அல்ஜீரியா விஷயமாக எது பேசினாலும் பிரான்ஸ் பகிஷ்கரித்து வருகிறது. மேலும் இந்த தடவை கூட்டத்திற்கு அல்ஜீரியாவிலிருந்து அமெரிக்கா வந்திருக்கும் அல்ஜீரியா தேசியத் தோழர்கள் மூவருக்கு அமெரிக்காவில் நுழைய அனுமதி தந்ததற்காக பிரான்ஸ்—அமெரிக்காவிடம் தன் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது.

அல்ஜீரியாவில் நடக்கும் போர் இன்னும் நின்றபாடில்லை.

சுயநிர்ணய உரிமைக்குத் தேவையான வாக்குறுதிகளை அல்ஜீரியாவுக்கு வழங்காமல் போர் நிறுத்தத்தைப் பற்றிப் பேசுவதில் பயனே இல்லை— என்று தேசியத் தோழர்கள் ஜெனரல் டிகாலிடம் கடந்த செப்டம்பர் மாதமே அறிவித்து விட்டார்கள். அதைத் தொடர்ந்து நம்பிக்கையின் வாடை அல்ஜீரியாவின் பக்கம் இதுவரைவிசவே இல்லை.... குமுறல் நீடிக்கிறது!

பேச்சு வார்த்தைகள் நடந்தால் அதனால் பயன் ஏற்படும் என்று மத்தியக் கிழக்கில் உள்ள அராபிய நாடுகள் நினைக்கின்றன. ஜெனரல் டிகால்கூட பத்திரிகை நிருபர்களிடையே நவம்பர் பத்தாம் தேதி பேசும்போது இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்தார். மேற்கொண்டு இவ்விஷயமாக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால், அதற்கு அல்ஜீரியர்களின உணர்ச்சிதான் காரணம். ஜெனரல் டிகாலுக்கு அவருடைய சகாக்களிடையே இருந்த மதிப்பு கொஞ்சம் குறைந்துவிட்டது என்பதென்னவோ உண்மை! அதனால் அல்ஜீரியாக் காலனிகளையும் உள்ளே தனியாக ஆர்ப்பாட்டம் நடத்தும் பிற்போக்குவாதிகளையும் டிகாலினால் இனியும் சமாளிக்கமுடியாது என்பதுதான் அல்ஜீரியர்களின் எண்ணம்.

ஜெனரல் டிகால் பதவிக்கு வந்த பின்னால் அல்ஜீரியர்களுக்கு நல்ல காலந்தான். ஏறக்குறைய பல விஷயங்களில் ஒத்துப்போய் விட்ட டிகாலுக்கு எதிராக ஒரு உள்நாட்டுக் குழப்பம் உருவாவதை அல்ஜீரியர்கள் விரும்பவில்லை.

பேச்சு வார்த்தைகள் நடத்த இதுமட்டுமா தடையாக இருக்கிறது....? அல்லவே அல்ல! இன்னொரு பெரிய தடையென்னவென்றால் அல்ஜீரியாவில் தங்கியிருக்கும் பிரெஞ்சுப் படைதான். பிரெஞ்சுப் படை அல்ஜீரியாவில் இருக்கும்வரை, அல்ஜீரியர்கள், பிரான்சுடன் அல்ஜீரியா சேர வேண்டும் என ஓட்டுப்போடுவார்களே தவிர பிரிந்துபோக விரும்பமாட்டார்கள். அதனால் பிரெஞ்சுப் படைகள் வெளியே போகவேண்டும் என்று தேசியவாதிகள் விரும்புகிறார்கள்.

ஆனால் இந்த விவகாரத்தில் பிரெஞ்சு தேசிய அசெம்பிளியின் கருத்து முற்றிலும் வேறாக இருக்கிறது—ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதாம் (1960) ஆண்டு ராணுவ பட்ஜெட்டை நிறைவேற்றிய அச்சபை பத்து லட்சம் படைகளுக்குப் பணம் ஒதுக்கியிருக்கிறது. எப்படியோ ஒதுக்கிக்கொள்ளட்டும்; அல்ஜீரியர்கள் இருக்கமுடியாத நிலை உருவாகியிருக்கிறது. காரணம் பத்து லட்சத்தில், பாதி படைகள் அல்ஜீரியாவில் வைக்கப்படவேண்டுமாம்! எப்படியிருக்கிறது? பேச்சு வார்த்தைகளும் நடக்கவேண்டும் —படைகளும இருக்கவேண்டும் என்றால் போர் நிற்க எப்போது வழி ஏற்படும்?

டுனிசியாவின் ஜனாதிபதி பௌர்கிபர் உள்பட சில அனுதாபிகள், அல்ஜீரியா ஏதாவது ஒரு நடவடிக்கையை எடுத்துத்தான் ஆகவேண்டும் என்கிறார்கள். 1946—ம் ஆண்டு பிரான்சுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போன ஹோ—சி—மின் எவ்வித முடிவும் காணாமல் வந்தது போருக்கு அஸ்திவாரமிட்டது, அன்று ஆரம்பித்த இந்தோ-சீன போர் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து நடந்தன. அதைப் போல் ஒரு நிலைமை அல்ஜீரியாவில் ஏற்பட்டு விடுமோ ஏன்று தான் சில சமாதானப் பிரியர்கள் பயப்படுகிறார்கள். ஏனெனில் அல்ஜீரியாவில் யுத்தம் ஆரம்பமாகி ஐந்து வருடங்கள் ஆகி விட்டன. இதை முடித்துவிட வேண்டும் என்று உலகத்தில் உள்ள பல நாடுகள் மட்டுமல்ல, பிரஞ்சு மக்களும் விரும்புகிறார்கள். அதனால்தான் அனைவரின் கவனமும் ஐக்கிய நாடுகள் சபையின் பக்கம் திரும்பி இருக்கிறது.

கிரீஸ் பய முறுத்தப்படுகிறது

ரஷ்யப் பிரதமர் குருசேவ், கிரீஸ் தேசத்து உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகிறார் என்றும் சமயம் வாய்க்கும்போதெல்லாம் பயமுறுத்துகிறார் என்றும், கிரீஸ் பிரதமர் கான்ஸ்டன்டைன் கரமன்லிஸ், குருசேவ் மீது குற்றப் பத்திரிகை படித்திருக்கிறார். இதற்குக் காரணம் குருசேவ் புடாபெஸ்டில் பேசிய பேச்சுதான். வழக்கம்போல் தனது நாட்டை எல்லா விதத்திலும் உயர்த்தியும், இதர வல்லரசுகளைத் தாழ்த்தியும் பேசிய ரஷ்யப் பிரதமர் தனது பேச்சின் நடுவே 'ஹங்கேரிக்கு, 1956–ம் வருடம் நாங்கள் உதவியிருக்காவிட்டால், வருங்கால உலக சரித்திரத்தில் எங்களுக்கு நல்லபெயர் கிடைத்திருக்காது' என்று குறிப்பிட்டார். பேச்சு இதே தோரணையில் இருந்திருந்தால் பரவாயில்லை. அவர் தொடர்ந்து பேசுகையில் கிரீஸ் மக்களின் வளர்ச்சியைக் குறிப்பிட்டு விட்டு. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு தங்களது ஆட்சியை ஸ்தாபிக்க முயன்ற பல முற்போக்கு கிரேக்கர்களை, முதலாளித்துவ நாடுகள் அடக்கி விட்டன என்றார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் முதலாளித்துவ நாடுகள் எப்போதும் முதலாளித்துவ ஆட்சிக்கு ஆதரவு தரத் தயங்குவதில்லை என்றும் அவர் சொன்னார்.

இப்போது இருக்கும் அமைதியான சர்க்காரைக் கவிழ்த்து விட்டு, தங்களது ஆட்சியை நிறுவத் துடிக்கும் 'புரட்சிப் பிரியர்களுக்கு, குருசேவ்வின் பேச்சு மறைமுகத் தூண்டுதலாக இருக்கிறது என்கிறார் கரமன்லிஸ். ஹங்கேரி விவகாரத்தில் தலையிட்டு, நல்ல பெயர் பெற்று விட்டதாக மார்தட்டும் குருசேவ், அதே தந்திரத்தை கிரேக்க நாட்டின் பக்கம் திருப்ப மாட்டார் என்பது என்ன நிச்சயம்? கிரேக்கப் பிரதமர் கரமன்லிஸ் பயப்படுவதில் அர்த்தம் இல்லாமல் இல்லை! ஏனெனில் குருசேவை வரவேற்க கிரீஸ் நாட்டில் நிறைய "தோழர்"கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

எகிப்து-பிரிட்டனுடன் கை குலுக்கிறது

சூயெஸ் பிரச்னைக்குப் பின் எகிப்து நாடு மீண்டும் பிரிட்டனுடன் சுமுகமாக ஒத்துப் போகும் முகத்தான் முதலில் ஸ்தானிகர்களைப் பரிமாறிக் கொண்டிருக்கிறது. சூயெஸ் பிரச்னை ஆரம்பமானவுடன இரு நாடுகளிலும் இருந்த மற்ற நாட்டு ஸ்தானிகராலயங்கள் மூடப்பட்டு விட்டன. மூன்று வருடங்களுக்குப் பின் இராஜ தந்திர உறவு மறுபடியும் ஆரம்பமாகிறது. பிரிட்டனின் ஆக்கிரமிப்பை எகிப்து அவ்வளவு விரைவில் மறந்துவிட முடியாது என்றாலும், நாட்டு நலனுக்காகவும், அபிவிருத்திக்காகவும் இம்மாதிரி உறவு அவசியம் தேவைப்படுகிறது. ஸ்தானிகர்களைப் பரிமாறிக்கொள்ளும் விஷயம் கடந்த சில மாதங்களாகவே இரு நாடுகளின் யோசனையில் இருந்து வந்தது என்று தெரிகிறது. பழையனவற்றை முற்றிலும் மறந்து விட்டு, புது உறவை ஆரம்பித்திருக்கும் அவ்விரு நாடுகளும் பாராட்டுக்குரியவை.

இதனால் மேற்கு ஆசியாவில் இருக்கும் அமைதியின்மை கொஞ்சம் குறையலாம். உலக சமாதானத்திற்கு அடிக்கல் நாட்டியது போலவும் இருக்கும். ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்ல முடியும். எகிப்து நாட்டு ரேடியோ நிலையங்கள் பிரிட்டனை ஓயாமல் திட்டிக் கொண்டிருக்கும் வேலை இனி நிச்சயம் நீடிக்காது. எகிப்து-பிரிட்டன் பண உதவி ஒப்பந்தமும் விரைவில் கையெழுத்தாகிவிடும்.

சவுதி அரேபியா நாடு ஒன்றுதான் பிரிட்டனுடன் இப்போது இராஜ தந்திர உறவை வைத்துக் கொண்டிருக்கவில்லை. பிரிட்டனுக்கும் சவுதி அரேபியாவுக்கும், 'பௌராமி பாலைவனச் சோலை' விஷயமாகத்தான் மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தது. எகிப்து முதல் அடி எடுத்து வைத்திருப்பதால், சவுதி அரேபியாவும் பிரிட்டனுடன் முன்பு போலவே உறவு கொள்ள விரைவில் ஆரம்பிக்கும் என்று நிச்சயம் நம்பலாம். எகிப்து-பிரிட்டன் உறவுமீண்டும் ஆரம்பமாகியிருப்பதை ஆசிய நாடுகள் எல்லாமே வரவேற்றிருக்கின்றன.

வடக்கு வளர்கிறது

○ ஆசிரியர்களுக்குப்பயிற்சி அளிக்கும் வசதிகளை விரிவுபடுத்த மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் நிதி உதவி :

அசாமிற்கு	ரூ.	17 01,500
பீகாருக்கு	,,	55,82 138
பம்பாய்க்கு	,,	24,66,000
மத்தியப்பிரதேசத்திற்கு	,,	49,65,060
ஒரிசாவிற்கு	,,	28,80,000
இராஜஸ்தானுக்கு	,,	34,05,592
உத்திரப்பிரதேசத்திற்கு	,,	30,75 938
மேற்கு வங்காளத்திற்கு	,,	26,67,700

ஆமாம் ; சென்னைக்கு ஒன்றுமில்லையா? அல்லது சொல்லாமல் விடப்பட்டு விட்டதா ? யாருக்குத் தெரியும் ?

○ பம்பாயில் ஒரு ரேயான் பட்டு தயாரிப்புத் தொழிற்சாலை அமைக்க ஜப்பான் நிறுவனம் ஒன்றுடன் பரோடா நிறுவனம் ஒன்று ஒப்பந்தம் செய்துள்ளதாம். தொழிற்சாலை எங்கே அமையப் போகிறது? தெற்கிலா? இல்லையில்லை: எல்லாம் வழக்கம்போல் வடக்கில்தான். பம்பாய் மாநிலத்தில் சூரத் அருகிலேயே உதனை எனுமிடத்தில் நிறுவப்படும். 3 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும், 6 டன் வரை ரேயான் உற்பத்தி செய்யும் சக்தி வாய்ந்த தொழிற்சாலையாம் அது.

○ புதிதாக வடக்கே கட்டப்பட்ட 'பஞ்சக்குன்று' அணையைப் பிரதமர் நேரு திறந்து வைத்தார். 14 லட்சம் ஏக்கர் நிலத்தை இந்த அணை நீர் வளப்படுத்துமாம். 40 ஆயிரம் கிலோவாட் மின்சார சக்தி அளிக்குமாம்.

சென்ற இதழில்...

மாமாளிகையை விட்டுப் புறப்பட்ட பெருந்தேவி வேகமாக குதிரையை ஓட்டிக்கொண்டு சென்ருள். வழியில் பல பயங்கரங்களைத் தாண்டிச்சென்றுகொண்டிருந்தாள். பெருந்தேவியின் உள்ளத்தில் பெரும் போராட்டம் எழுந்தது. என்ருலும், முன்னேக்கிச் சென்றுகொண்டிருந்த பயணத்தில் எந்தவிதத் தயக்கமும் ஏற்படவில்லை.

பாழ்மண்டபத்தைக் கண்டதும் அங்கு இறங்கி இளைப்பாறத் தொடங்கினுள். ஆனுல் உடல் வலியெடுத்தது. 'ஐயோ, அம்மா!'—எனக் கதற ஆரம்பித்தாள்.

பெருந்தேவியைத் தேடிக்கொண்டு புறப்பட்ட இருங்கோவேள் தீப்பந்தத்தின் உதவியுடன் குதிரைக் குளம்படிப் போக்கை அறிந்துகொண்டு வேகமாக முன்னேறி வந்தான்.

பாழ்மண்டபத்தில் படுத்திருந்த பெருந்தேவி குதிரையின் குளம்படிச் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டாள். தன்னைத் தேடிக்கொண்டுதான் வருகிருர்கள் என்றறிந்த பெருந்தேவி குதிரையிலேறி வேகமாகப் புறப்பட்டாள். அருகில் வந்த இருங்கோவேளும் அவளை ஏதேதோ சொல்லித் தடுத்துப் பார்த்தான். அவள்தான் மன்னனைப் பழிவாங்கும் நோக்கத்தோடு, மணவாளன் லட்சியத்தை நிறைவேற்றும் நினைப்போடு சென்றுகொண்டிருக்கிருளே?

அதற்குள் பூம்புகாரும் வந்துவிட்டது. பொழுதும் புலர்ந்துவிட்டது. இனி அங்கு தான் இருக்கக்கூடாது என்றெண்ணிய இருங்கோவேளும் திரும்பிவிட்டான்!

உள்ளே நுழைந்த பெருந்தேவி பூம்புகாரின் எழிலையும் பொலிவையும் நோக்குகிருள். தான்வந்த காரியத்தை நிறைவேற்றுதற்காக அரண்மனை நோக்கி நடைபோட்டாள். ஆனுல், அரண்மனைக் கதவுகள் மூடப்பட்டிருந்தன. குதிரையுடன் வெளியிலேயே நின்றுகொண்டு உள்ளே செல்வதற்கு வழி என்ன என்று யோசித்தாள்.

28. கடியலூர்ப் புலவர்

பெருந்தேவி, அரண்மனைக்குள் எப்படி நுழைவது என்று யோசித்துக்கொண்டிருந்த நேரத்தில் அரண்மனையிலுள்ளோர் பரபரப்புடன் எழுந்து ஒளி பொருந்திய முகங்களுடன அங்குமிங்கும் ஓடியாடி ஏதோ ஒரு குறிப்பிட்ட அலுவலில் ஈடுபட்டிருந்தனர். எங்கு பார்த்தாலும் வண்ணக்கோலங்கள் வரையப்பட்டன. மகர தோரணங்கள் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டன. மண்டபங்களை விழாக்கூடங்களாக்கிடும் முயற்சியில் வீரர்கள் தீவிரங் காட்டினர். மன்னர் பெருமானின் கொலு மண்டபம் என்றுமிலலாத தனி அழகுடன் விளங்கிட வேண்டுமென்று அமைச்சர் கட்டளையிடவே அந்த ஆணையைச் சிரமேற்கொண்டு வீரர்கள் பணிபுரிந்தனர். புலிக்கொடித் தோரணங்கள் அசைந்தாடிக் கொண்டிருந்த காட்சி கண்டு அரண்மனைக்குள்ளே வாழ்பவர்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர்.

"தமிழ் காக்கும் தங்கமே! வருக!" எனும் வரவேற்பு வளைவுகள் காலைக் கதிரவனின் ஒளிபட்டுத் தகதகவென மின்னிக்கொண்டிருந்தன. கரிகால் மன்னன் அதிகாலையிலேயே எழுந்து கொலுமண்டபத்திற்குப் புறப்படுவதற்குத் தயாராகிவிட்டான்.

பூம்புகார் தலைநகரின் கொலுமண்டபத்தில் அமர்வதென்ருல் கரிகாலனுக்குத் தனி உற்சாகம். பூம்புகாரில் இருந்தவாறே உறையூருக்கும் அரசனென விளங்கும் புகழ் படைத்தவனன்ருே சோழப் பெருமன்னனும் திருமாவளவன் கரிகாலன்? கொலுமண்டபத்தில் பூம்புகார்த் தலைநகர மாந்தரும்—உறையூர் நகர மாந்தரும் வந்து நின்று தங்கள் விருப்பங்களை வெளியிடும்போது கரிகாலனுக்கு நெஞ்சு புடைக்கும். தான் விளைத்த வீரத்தையெண்ணிப் பூரிப்படைவான்! தன்னுல் உருவாகிவிட்ட சோழப் பேரரசு நீண்ட நெடுங்காலம் வலுவிழக்காமல் வாழவேண்டுமென்று அவன் விரும்பியிருந்தான். அவனைப் புகழாத புலவர்கள் அந்தக் காலத்தில் இல்லை. பத்துப்பாட்டு என இன்று அழைக்கப்படும் பழந்தமிழ் இலக்கியத்தில் பட்டினப் பாலையும், பொருநராற்றுப் படையும் அவனது சிறப்பை வானளாவப் புகழ்ந்து கூறுகின்றன.

"காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்கு நிலைமாடத்து
உறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ."

—என்று, அவன் செய்த பெருஞ் செயல்களை வர்ணிக்கிறது பட்டினப் பாலை, உலகமெல்லாம் மழை மறுத்து பஞ்சம் வந்தபோதும் சோழமன்னன தன் செங்கோல் அறததாலே பொன்னிமா நதியின துணைகொண்டு பொன் கொழிக்கும் நாடாகவேச் சோழ நாட்டை ஆக்கிடுவான். கரும்பாலைகளிலே எழுகின்ற புகை, நீர் நிறைந்த இடத்தில் செழித்துள்ள நெய்தற்பூவையும் வாடச் செய்யும். தென்னை, வாழை, கமுகு, மஞ்சள், மா, சேம்பு, இஞ்சி முதலியன பயன் கெழுமி நிறைந்த குலைகளுடனும் கிழங்குகளுடனும் நிற்பதை சோழ நாடெங்கும் காணலாம். உப்பங்கழிகளிலே — நிரல்படக் குதிரைகளைப் பிணைத்தாற் போன்று துறிகளிலே பிணைக்கப்பட்ட படகுகளையும், புலி இலச்சினை செதுக்கப்பட்ட பெரிய கதவுகளை உடைய இல்லத்தில் உள்ள அடுக்களையில் சோறு வடிப்பதால் ஒழுகிய கொழுங்கஞ்சி தெருவிலே ஆறுபோல ஓடுகிற நிலைமையையும் வளத்தையும் சித்தரித்துச் செந்தமிழ் நாட்டின் பழைய நிலைமையைக் கூறுவதே பட்டினப்பாலை.

இதன் பாட்டுடைத் தலைவன் கரிகால் திருமாவளவனேதான். சோழநாட்டுப் பெருமைகளையும் சோழ மன்னனின் ஆற்றலையும் புகழ்ந்திடும் மற்ருெரு இலக்கியந்தான பொருநராற்றுப் படையாகும்.

பட்டினப்பாலையின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனூர். இந்தத் தமிழ்ப்பாவலர் பட்டினப்பாலை, பெரும்பாணுற்றுப் படையெனும் இருபெரும் கருவூலங்களைத் தமிழகத்துக்குத் தந்தவர். இவருடைய "கண்ணனூர்" என்னும் பெயருக்கு முன் வந்துள்ள கடியலூர் என்பது அவருடைய ஊரைக் குறிப்பதாகும். உருத்திரன் என்பது அவரது தந்தையின் பெயர். பட்டினப்பாலை மூலம் கரிகாலனின் அறவழி ஆட்சியை விளக்கிக் காட்டி கடியலூர் உருத்திரங் கண்ணனூர், மன்னனின் அன்புக்குப் பெரிதும் பாத்திரமாகிவிட்டார். அந்த அன்பின் அடையாளமாகக் கரிகாலன், கண்ணனூருக்கு பதினறு நாருயிரம் பொன் பரிசில் வழங்கினன் என்று வரலாறு முழங்குகிறது. பொருநராற்றுப் படை இயற்றிய முடத்தாமக் கண்ணியார் கரிகாலனின் நாட்டு வளத்தையும் நகர் வளத்தையும் ஆற்றல் அறிவு ஆகியவற்றையும் இலக்கியத்தில ஏற்றிய பெருமைக் குரியவராவார்.

இரு புலவரில் முதலில் கூறப்பட்ட பட்டினப்பாலை ஆசிரியருக்குப் பரிசு அளிக்கும் விழாதான் அன்று பூம்புகார் அரண்மனையில் நடக்க இருந்தது. அதனுல்தான் அரண்மனை ஆட்கள் பரபரப்புடன் வேலைகளைக் கவனித்தனர். மன்னனைப் பாட்டுடைத் தலைவனுக வைத்து இயற்றப்பட்ட பட்டினப்பாலையைப் பூம்புகார்க் கொலுமண்டபத்தில் அரங்கேற்றுவதற்காகவே உருத்



திரங் கண்ணனார் வருகிறார். அவர் வருகையை முன்னிட்டே அரண்மனை விழாக் கோலம் பூணுகிறது.

இன்னும் புலவர் வந்து சேரவில்லை. அவரை மிக்க மரியாதையுடன் கோலாகலமாக வரவேற்க வேண்டுமென்று திட்டம் தீட்டப்பட்டிருந்தது. புலவரை வரவேற்பதற்காக அரண்மனைக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டன. வாயிற்புறத்தில் காத்திருந்த பெருந்தேவியின் காதுகளிலும் கடியலூர்ப் புலவர் அரண்மனைக்கு வரப்போவது பற்றிய செய்தி எட்டியிருந்தது. வாயிற்புறத்துப் பெருங்கதவுகள் திறக்கப்பட்டதும் பெருந்தேவி உள்ளே நுழைய முயற்சிக்காமல் வெளியிலேயே அதிக தொலைவில் போய்த் தன் குதிரையுடன் மறைந்திருந்து கவனித்துக் கொண்டேயிருந்தாள்.

தொலைவில் "சோழப் பேரரசு வாழ்க!" "கடியலூர்ப் புலவர் வாழ்க!" எனும் முழக்கம் கிளம்பியதை அவள் கேட்டாள். அவள் மறைந்துநின்ற இடத்துக்கு அருகாமையில் அந்த ஒலி வந்துவிட்டது. அழகான முத்துச் சிவிகையொன்றில் புலவர் அமர்ந்திருந்தார். புலவரின் முகத்தில் வெற்றிரேகைகள் மின்னிக் கொண்டிருந்தன. அவரது கையில் சுவடியொன்று இருந்தது. அந்தச் சுவடிதான் எதிர்காலத்தில் பத்துப்பாட்டு வரிசையில் பழம்பெரும் இலக்கியமாக அமையப்போகிறது என்று அவர் எண்ணினாரோ இல்லையோ — ஆனால் அவரது கண்கள் சுவடியிலேயே ஆழ்ந்திருப்பதைக் காணும் எவரும் அந்தப் படைப்பு நிச்சயம் அழியாத உயிர் பெறும் என்றுதான் கூறுவர். தான் எழுதியவைகளைத் திரும்பத் திரும்பப் படித்துத் திருத்தங்கள் செய்து கொண்டே வந்தார். சிவிகையில் இருந்தவாறே! அவர் எழுதியது அவருக்கே இனிக்கிறது போலும் — அதனால்தான் அவரது முகத்தில் அத்தனை கம்பீரம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

" திருமாவளவன் தெவ்வர்க் [கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் [தோளே."

— காதலியின் தோள்மீது கையைப் போட்டுக்கொண்டு காதலன், காட்டு வழியே செல்கிறான். அப்போது அவன் காட்டுக்கு உவமை தேடுகிறான். கரிகாலன், தனது பகைவர்களின் மீது வீசிய வேலைக் காட்டிலும் கடியவாயிருந்தது அந்தக் காடு. அவன் பற்றியுள்ள தோள் எப்படியிருந்ததாம்? கரிகாலனின் செங்கோலினும் குளிர்ந்ததாகுமாம்.

தான் எழுதியவற்றைத் தானே சுவைத்தார் புலவர். தன் எழுத்தை, எல்லாரையும்விட அதிகமாகச் சுவைத்துப் பாராட்டக் கூடியவர் ஒருவர் பூம்புகாரில் இருக்கிறார்—அவர்தான் முதலில் தனது பட்டினப்பாலையைக் காணவேண்டும் என்றெல்லாம் கடியலூரார் எண்ணமிட்டவாறு வந்து கொண்டிருந்தார். தனக்குப் பாராட்டுரை வழங்கத் தகுதியுடையவர் யார் என்று அவர் முடிவு கட்டுகிறார்? புலவர் காரிக்கண்ணனார்தான் அந்தத் தகுதி பெற்றவர் என்பது உருத்திரங் கண்ணனாரின் முடிவு. காரிக்கண்ணனார் கொலுமண்டபத்திலே தனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்—அவரைச் சந்தித்துப் புல திங்கள்கள் ஆகின்றன — இன்று மிக மகிழ்ச்சிகரமான நாள்தான் — என்றெல்லாம் நினைத்துப் புளகாங்கிதமுற்றவாறு கடியலூரார் வந்துகொண்டிருந்தார்.

சிவிகையைச் சுற்றி முன்னும் பின்னுமாக குதிரைகளில் நூற்றுக்கு மேற்பட்ட வீரர்கள் புலிக்கொடிகளுடன் வந்துகொண்டிருந்தார்கள். அந்தத் தமிழுணர்ச்சி மிக்க பவனியைப் பெருந்தேவி கண்டாள். இதுதான் நல்ல சமயமென்று பவனி அருகே வரட்டுமென்று காத்துக் கொண்டிருந்தாள். முன்னால் வந்த ஐம்பது குதிரை வீரர்களுள் பெருந்தேவி மறைந்து நிற்பதைப் பார்க்காமலே வேகமாகப் போய்விட்டார்கள்.

அடுத்து புலவர் அமர்ந்திருந்த சிவிகை. அதுவும் அவளைவிட்டு நகர்ந்த பிறகு பின்னால் உள்ள ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் பெருந்தேவி நிற்கும் இடத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். தருணம் பார்த்திருந்த பெருந்தேவி, குதிரை வீரர்களின் கடைசி வரிசைக்கும் பின் வரிசையில் தனியாகச் சென்று அவர்களோடு கலந்துகொண்டாள்.

புலவரைச் சுமந்துவந்த சிவிகை அரண்மனைக்குள்ளே நுழைந்தது. அத்துடன் குதிரை வீரர்களும் தொடர்ந்தார்கள். அவர்களுடன் கொலை வெறியுடன் வந்திருக்கும் பெருந்தேவியும் யாருக்கும் தெரியாமல் கூட்டத்தோடு கூட்டமாக அரண்மனைக்குள் புகுந்துவிட்டாள்.

அரண்மனை வாயிலைக் கடக்கும் வரையில்தான் பெருந்தேவிக்குக் கவலையாக இருந்தது. உள்ளே நுழைந்த பிறகு அவளுக்கு எல்லாமே சுலபமாகத் தெரிந்தது. புலவர் கடியலூராரை வரவேற்பதற்கான விழாவில் ஆடவரும் பெண்டிரும் அளவில்லாத ஆர்வங்காட்டி ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தனர். அரண்மனைக்குள்ளே தாராளமாக நடமாட முடியாதபடி ஒரே நெருக்கடி. அதிவிரைவில் அப்படிக் கூட்டம் சேர்ந்துவிட்டது.

பெருந்தேவி குதிரை வீரர்களை விட்டுப் பிரிந்து மெதுவாகக் குதிரையை விட்டு இறங்கி சுற்றும்முற்றும் பார்த்துக்கொண்டாள். யாரும் தன்னைக் கவனிக்கவில்லையென்று உணர்ந்து குதிரையை அங்குள்ள ஒரு தூணில் கட்டிவிட்டு பெண்களின் கூட்டத்திலே போய்ச் சேர்ந்துகொண்டாள். புலவரை வரவேற்பதில் அக்கரையும் அவசரமுங்கொண்டிருந்த பெண்களுக்குப் பெருந்தேவியைக் கவனிப்பதற்கு ஏது நேரம்?

புலவரின் சிவிகை கொலு மண்டபத்துக்கு அருகே இறக்கப்பட்டது. புலவர் இறங்கி கொலு மண்டபம் நோக்கிப் புறப்பட்டார். ஏற்கனவே புலவர்கள் பலர் புடைசூழ நின்றுகொண்டிருந்த கரிகால மன்னன் உருத்திரங் கண்ணனாரை எதிர்கொண்டழைத்து மார்புறத்தழுவி கொலு மண்டபத்துக்குள்ளே அழைத்துச் சென்றான். உள்ளே ஆண்களும் பெண்களும் தனித்தனியே அமர்வதற்கேற்ற வகையில் ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

புலவர்கூட்டத்தில் விழிகளையோட்டி ஏமாந்த உருத்திரங் கண்ணனார், அரசனைப் பார்த்து ஆவல் ததும்ப "காரிக்கண்ணனார் எங்கே?" என்று கேட்டார். அதற்குக் கரிகாலனால் பதில் கூற முடியவில்லை. அவன் கண்கள் கலங்கிவிட்டன. சமாளித்துக் கொண்டான். "அவர் மதுரைக்குப் போயிருக்கிறார்." என்று பொய் கூறி மழுப்பினான்.

கடியலூராருக்கும் கரிகாலனுக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடைபெறும்போதே பெருந்தேவி, பெண்கள் அமரும் பகுதியில் வந்து உட்கார்ந்து கொண்டாள். ஏதோ ஒரு மகத்தான லட்சியத்தை சாதிக்கப் போகிறோம் என்ற கடமை உணர்ச்சியும்—வெறித்தனமும் அவளது நோயைக்கூட "சற்றே விலகியிரு!" என்று கூறிவிட்டன. இடையிலே மறைத்து வைத்துள்ள கட்டாரியின் பிடியை அழுத்திப் பிடித்தவாறே அவள் கரிகாலனின் முகத்தை நோக்கினாள். தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள சமயம் பார்த்திருந்த அவளுக்குக் கரிகால் சோழனின்முகம் சற்றுக்கோழைத்தனத்தை அளித்தது. அவன்கண்களில் கனிவு இருந்தது. கனல் இல்லை. பேச்சில் பண்பு தெரிந்தது. பயங்கரம் இல்லை. கையிலே வாளைப் பிடித்திருக்கிறான்—அந்த வாளோ தீயோரைத்தான் தாக்கும் என்று பக்கத்திலுள்ள பெண்கள் மன்னனைப் பற்றி மதிப்புரை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

வேளிர்குல அரசி, எந்தச் சபலத்துக்கும் இடங் கொடுக்கக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டு கரிகாலனை வீழ்த்த சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நீட்டோலை...

[12-ம் பக்கத் தொடர்ச்சி.]

செத்து விடுவான் அந்த நிலா முகத்தான் என்று மருத்துவர் கைவிரித்து விட்டனர்.

அய்யோ! இதோ சாகப் போகிறான்—மூச்சு பயங்கரமாக அலை மோதுகிறது — இன்னும் சில விநாடிகளே பாக்கி! ஆகா! கண் விழிக்கிறான் கண்மணி — உதடுகள் அசைகின்றன. சுற்றுமுற்றும் பார்க்கிறான். எல்லோரும் அவனையே கவனிக்கிறார்கள். என்ன சொல்லப் போகிறான்?

"அய்யோ! நான் செத்துவிடுவேனா? என்னை எப்படியாவது காப்பாத்துங்க!" என்று சொல்லியிருப்பான் என்றுதானே நீ நினைக்கிறாய்?

இல்லை நண்பா! இல்லை! அந்தச் சின்னஞ் சிறு வாய் அதற்காகத் திறக்கவில்லை. வாழ் நாள் முழுதும் நினைத்து நினைத்து நீயும் நானும் அழுதுகொண்டேயிருப்பதற்காகத்தான் திறந்ததாம். நான்கூட இளமையிலேயே பொது வாழ்வுத் துறையால் கவரப்பட்டேன். ஆனால் இவ்வளவு இளமையில் ஆறுமுகத்தைப் போன்ற வீரத்தைப் பெற்றிருந்தேன் என்று நான் பெருமையடைய வழியில்லை. நாமெல்லாம் வெட்கப்படக்கூடிய அளவுக்கு இளமையில் வீரம் விளைவித்தவன் ஆறுமுகம். நாட்டுப் பற்றுக் கொண்டவன் அந்தச் சிங்காரத் தம்பி. 'செத்துவிடுவோமா' என்ற அச்சம் அவனுக்கு ஏற்படவில்லை. இவ்வளவு இளமையில் "சாகிறோமே யென்ற வேதனை அவனை வதைக்கவில்லை. பிறகு என்ன கவலை அவனுக்கு? மரண முகப்பில் அவன் சொன்னது என்ன?

"நான் பிழைப்பது சந்தேகம். நான் செத்துப்போனாலும் பரவாயில்லை. நமது தளிக்குக் கருணாநிதி அண்ணனைக் கூப்பிட்டு ஒரு கூட்டம் நடத்துங்கள்."

—இதைச் சொல்லிவிட்டுச் சிறிது நேரத்திற்கெல்லாம் தன் விழிகளை மூடிக்கொண்டானாம். பிறகு அந்த எழில் விழிகள் திறக்கவேயில்லை. அவன் கோரிக்கையை — இல்லை இல்லை — அருமைத் தம்பியின் அன்புக் கட்டளையைச் சிரமேற்கொண்டு விழிகளில் நீர் வழிய வழிய ஓடினேன் அந்தக் கூட்டத்துக்கு!

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். ஆறுமுகத்தின் அணிவகுப்புத் தம்பிகளும் அமர்ந்திருந்தனர். அனைவரின் கண்களும் கலங்கியிருந்தன. தாய்மார்கள் ஒவ்வொருவரும் தாங்கள் பெற்ற மகனைப் பறிகொடுத்தது போலவே நெஞ்சு உடைந்து நின்று கொண்டிருந்தனர்.

கூட்டத்தில் பேசினோம் — இல்லை; அழுதோம்! புலம்பினோம்!

ஆறுமுகத்தின் திரு உருவத்தை நெஞ்சில் பதித்துக் கொண்டோம். இதோ நீயும் அவனை உன் இதயத்தில் குடியேற்றிடவேண்டுமென்பதற்காக அவன் நிழற் படத்தை அனுப்பியிருக்கிறேன்.

"புறநானூறு" அழிந்துவிடவில்லை நண்பா! "புறநானூறு" திரும்புகிறது என்பதற்கு ஆறுமுகம் ஒரு அறிகுறி!

அன்புள்ள,
நண்பன்.

சீராமுலு மறைவு

வடவரின் பிடி நீங்கி இந்த வளநாடு செழுமையுற எண்ணிய வெள்ளுடை வேந்தர் பி. தியாகராயரின் பேரராம், சென்னை தியாகராயர் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வந்த எம். சீராமுலு எம். ஏ. எல். டி. இத்திங்கள் 5-ம் நாள் இயற்கையடைந்தார். ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் பெரும்புலமை பெற்ற அவர், கல்லூரியின் முன்னேற்றத்திற்கு உழைத்த பெருந்தகையாளர். அவரது மறைவால் வாடும் குடும்பத்தாருக்கும், மாணவர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாநில அரசு ஊழியர்களே; நீங்கள் என்ன மட்டமோ?

சர்க்காரிலும் சாம்பிராணி கொட்டிவைக்கும் மடங்கள் உண்டு! என்ன பெயர் அவைகட்கு? கமிஷன்கள். அவைகளால் ஒரு படி முன்னேற்றம் கூட இல்லையா? இல்லை, இல்லை, இல்லவே இல்லை! ஏன் கமிஷன் பேரில் தவறா? இல்லை. இருப்பவர் பேரில், இயக்குபவர் பேரில்தான் தவறு! என்ன, அப்படி இமாலயத் தவறு நிகழ்ந்து வருகிறதா? ஆம்; இமாலய முன்னேற்றம் வரப்போகிறது, இந்தக் கமிஷனால் அந்தக் கமிஷனால்—என்பார்கள். ஆனால்—நாட்டு நிலைமை என்னவோ இமாலயம்போல் ஒரேயிடத்தில்தான் இருந்து வருகிறது.

சரி, இந்த வாரம் நம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த கமிஷன் எது? சம்பளக் கமிஷன்! யாருக்கு சம்பளம் உயர்வு, இதனால்? டில்லியில் மூலபிடம் இருக்கும் மத்திய அரசாங்கத்து ஊழியர்களுக்கு! அந்த ஊழியர்களுடன் ஒரே தெருவில், ஒரே வீட்டில், ஒரே வாழ்க்கையமைப்பில் வாழும் மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு இல்லையா? இருக்கும்! எப்போது? பொதுத் தேர்தலுக்குமுன் ஒரு ரூபாய் சம்பள உயர்வு கிடைக்கும். அதுவும் அந்தப் 'பிச்சை' எதற்கென்றால் காங்கிரசை மறக்காமல் ஓட்டுப் போட்டு ஆதரிக்க!

இந்த சம்பளக் கமிஷனின் சிபாரிசால் மத்திய அரசாங்க ஊழியருக்குக் கிடைத்த சம்பள உயர்வு எவ்வளவு? ஐந்து ரூபாய் அல்லது ஐநூறு புதுக் காசுகள். இதைக் கேட்டு மத்திய அரசாங்க ஊழியர்கள் குதித்திருப்பார்களே! இல்லை. குலுங்கிக் குலுங்கி அழுதார்கள். காரணம், அந்த ஐந்து ரூபாய் வந்தும் பயனில்லையாம்; ஏன், பயனில்லை? 95 ரூபாய் சம்பளக்காரருக்கு 5 ரூபாயைத் தரும் இதே சர்க்கார், 100 ரூபாய்க்கு ஆறே கால் ரூபாயைப் பிடுங்கிக்கொள்கிறது. 'பிராவிடண்ட் பண்ட்'—என்ற பெயரில்! இது நல்லதுதானே, பிற்காலத்தில் அது உதவுமே? நாடி தளர்ந்தபோது, கண்கள் நட்டுக்கொள்கிறபோது பணம் வந்து உதவி என்ன பயன்? வாழ்கிறபோதல்லவா பணம் உதவ வேண்டும்? உண்மைதான்! அம்மட்டோ, 'விலைவாசி ஏறிவிட்டது என்று கூறுகிறீர்களே; இந்தாருங்கள் ஐந்து ரூபாய்;.........ம்... கொண்டு வாருங்கள் ஆறேகால் ரூபாய்!' என்று கூறுகிறது அரசு. இதன் மூலம் விலைவாசி ஏறிவிட்டது என்று கூறிய ஊழியர்களுக்கு நூற்றுக்கு ஒன்னேகால் ரூபாய் அபராதம் போட்டிருக்கிறது!

ஏன் இம்மாதிரி உலகத்தோடு ஒட்டாத, ஊழியர்களின் நிலையையறியாத நிலையில் கமிஷன் சிபாரிசும், அரசாங்கச் செயலுமிருக்கின்றன? அவர்கள் உலகத்தைப் பார்க்கவில்லை; ஊழியரின் நிலையைப் பார்க்கவில்லை. எதைப் பார்த்தார்கள்? அரசாங்க நிதி இலாகாவைப் 'பார்த்தார்கள்; ஊழியர்கள் செய்யப்போகும் வேலை நிறுத்தத்தை நினைத்துப் பார்த்தார்கள். இரண்டுக்கும் இடையில் ஒரு 'எத்து வேலை' செய்ய ஆரம்பித்தார்கள். அதற்குப் பெயர்தான் சம்பளக் கமிஷன்!

இரண்டு சம்பளக் கமிஷன்கள் ஏற்பட்டனவே அவைகளில் நல்ல அம்சங்களே இல்லையா? ஏன் இல்லை? இருந்தன. அதைத் தவிர மற்றவைகளை அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டனர், சாக்கடை நீரில் புழுவை மாத்திரம் பிடித்து விழுங்கும் குள்ளவாத்தைப் போல!

ஒரேயடியாக மறைக்காமல் கூறுங்கள், கொஞ்சம்கூட மத்திய அரசாங்க ஊழியர்கள் முன்னேறவில்லையா? ஆம்......... முன்னேறி இருக்கிறார்கள், வயதில்! வாழ்க்கைத் தரத்திலும், சம்பளத்திலும் உயரவே இல்லையா அவர்கள்? உயரவே இல்லை. ஒளிக்காமல் சொல்ல வேண்டுமானால் 8 ஆண்டுகளுக்கு முன் எவ்வளவு பணம் பெற்றாரோ அவ்வளவுதான் பெறுகிறார். ஆனால் அன்றைய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 314. இன்றைய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 403. புள்ளி ஏறுகிறது; புளி விலையும் ஏறுகிறது! புழுங்கல் அரிசி விலையும் ஏறுகிறது! ஆனால் சம்பளம் அதே நிலையில்; வயிறு கேட்பதும் ஒரே அளவில்! சம்பளம் ஏற வழியே சொல்லவில்லையா கமிஷன்? சொல்லியிருக்கிறது ஒரு புது வழி! இதுவரை அரிசிவிலை ஏறினால், பருப்பு விலை ஏறினால், பொதுவாக வாழ்க்கைப்புள்ளி உயர்ந்தால் சம்பளம் ஏறும். மூன்று மாதத்திற்கொருதரம் 20 புள்ளி உயர்வுக்கு ரூ 5 பஞ்சப்படி தருவது என்றிருந்தது விதி. அதை உடைத்தெறிந்து விட்டது இச்சம்பளக் கமிஷன். அரசாங்கம் தயை கூர்ந்தால், நிதி இலாகா கருணை வைத்தால், மேலதிகாரிகள் ஈவிரக்கம் கொண்டால் மட்டுமே சம்பளம் உயர வழிவகை செய்திருக்கிறது!

இது நல்லதுதானே, அலுவலகத்தில் அதிகாரிகளுக்கு ஒரு பிடிப்பு இருக்குமல்லவா? ஆனால் கீழே இருப்பவனுக்கு 'உலகப் பிடிப்பு' விட்டுப் போகுமே. அதிகாரியின் கருணை பிறக்கிறவரை அவன் குடும்பத்திலுள்ளோர் காய வேண்டும்; குடல் கருக வேண்டும் என்பதுதான் நீதியா?

நீதி கிடைக்கவே கிடைக்காதா? கிடைக்காது. ஏனெனில் அரசு நிதி இல்லாத அரசு என்று காரணம் கூறுகிறார்கள்.

எப்படி? கூர்மதியில்லை அரசுக்கு என்பதற்கு உதாரணம், முன்பு வந்த சம்பளக் கமிஷன் சிபாரிசின்போது கூறினார்கள், வாழ்க்கைப் புள்ளி 160க்குள் நின்றுவிடும் என்று! ஆனால் 403 வரை வந்திருக்கிறது; இனி எவ்வளவு உயருமென்றும் இவர்களுக்குத் தெரியாது. இருந்தும் சம்பளம் இவ்வளவுதான். பஞ்சப்படி இதற்குமேல் போகாது என்று பசப்பு வார்த்தைகளை வீசுகிறார்கள்.

பசப்பு வார்த்தையா? ஆம்; பசப்புகிறார்கள். பொதுமக்களை வார்த்தைகளால்மயக்குகிறார்கள். சம்பளக்கமிஷன் பற்றி போகிற இடமெல்லாம் வாய்ப்பறையறைந்து வருகிறார்கள் மந்திரிகள்! '18 கோடி ரூபாய் செலவாகப்போகிறதாக்கும்; இத்தனை வெள்ளிப்பணத்தையும் அள்ளி இறைக்கப்போகிறோம் ஊழியர்களுக்கு; அவர்கள் இரைப்பை நிறையும், வாழ்வு வளமாகும்! பதினெட்டுக் கோடி....ரூபாய்.' என்று இவர்களே பெருமைப் பட்டுக் கொள்கிறார்கள்.

பெருமைப்படுவது சரியல்லவா? சரியென்றாலும், பெருமைக்குள்ளே ஒரு வஞ்சகம் அடங்கியிருக்கிறது. '18 கோடி ரூபாய் தந்தோம். இன்னும் சத்தம் போடுகிறார்கள் பாருங்கள். பொது மக்களே! இந்த ஊழியர்களுக்கு ஆதரவு காட்டாதீர்கள்'—என்று வாழ்வு கேட்கும் ஊழியரைப் பொதுமக்கள் அணியிலிருந்து பிரித்துவிடச் செய்த சூழ்ச்சிதான் இது.

அப்படியானால் சர்க்கார் 18 கோடியை ஊழியர்களுக்கு அள்ளி வழங்கவில்லையா? அள்ளி வழங்கியதற்கு மேலாக ஊழியர்களின் சட்டைப் பைகளிலிருந்து கொள்ளையும் அடித்துக் கொண்டது. கொள்ளை அடித்ததா?

ஆமாம்; முன்பே சொன்னோமே 5 ரூபாயைத் தந்து ஆறேகால் ரூபாயைப் பிடித்துக் கொள்கிறார்கள்—என்று, அந்தக் 'கொள்ளை'யில் மீதமாகும் ரூபாய் என்னாவது? அதில் பல கோடி ரூபாய் மிச்சமாவது மட்டுமல்ல; அத்தனை கோடி ரூபாயும் அப்படியே அள்ளித் தந்துவிடமாட்டார்கள். 55 வயது ஆன பின்னரோ, அகால மரணம் அடைந்த பின்னரோதான் கொஞ்சம் கொஞ்சமாக சிலருக்குத் தரப்படுகிறது. இன்னும் சற்றுப் புள்ளிவிபரத்தோடு சொல்ல வேண்டுமானால், 18 கோடி ரூபாய் சம்பளம் அதிகம் தரப்போகும் இவர்களுக்கு பிராவிடண்ட் பண்டினால் வரப்போவது 20 கோடியே 70 லட்சம் ஆகும். ஆகவே, சம்பள உயர்வினால் சர்க்காருக்குக் கிடைக்கும் இலாபம் (?) 2 கோடியே 70 லட்சம்!

இலாபமா கிடைக்கிறது? அது மட்டுமல்ல; ஊழியர்களின் ஓய்வு நேரங்களும், விடுமுறை நாட்களும் குறைக்கப்பட்டு வேலை நாட்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இவர்களுக்கு அதிகமான வருமானம் கிடைக்க வழியிருக்கிறது. ஒரு ஊழியரின் ஒரு நாள் வேலையிலிருந்து ஒரு ரூபாய் கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும், 4 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும்! ஆக, இந்த சம்பள உயர்வால் அரசாங்கம் அடைவது நட்டமல்ல; பேரிழப்பல்ல! ஏறத்தாழ 25 கோடி ரூபாய் கொள்ளை லாபம் அடிக்கும் பெரியதோர் வட்டிக்கடை வியாபாரம்தான் இது.

அம்மட்டோ தொழிற் சங்க உரிமைகளிலும் இந்தக் கமிஷனின் தலையீடு இருக்கிறது. அந்த சங்கங்கள் சிறுகச் சிறுகப் போராடி, செந்நீர் சிந்திச்சேர்த்த தொழிற்சங்க உரிமைகளுக்கு வேட்டு வைக்கப்பட்டிருக்கிறது. தகராறு ஏற்பட்ட காலத்திலிருந்துதான் நீதி வழங்கப்படும் என்ற நியதியைச் சுக்கு நூறாக்கி விட்டது இந்தக் கமிஷன்.

கமிஷன் நியமிக்கப்பட்டதோ தொழில் தகராறால்! நியமிக்கப்பட்ட தேதி 1—7—57! கமிஷன் தன் அறிக்கையில் 1—11—59—லிருந்து அமுலுக்கு வரவேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளது. வேடிக்கையிலும் வேடிக்கை! வேதனையிலும் வேதனை!

இரண்டரை ஆண்டு சலுகையை விழுங்கி ஏப்பமிட்டுவிட்டு ஏங்கி நின்ற ஊழியரை மேலும் ஏமாற்றக் குழியில் தள்ளிவிட்டது.

சரி, இந்த 'செகநாத தாஸ் கமிஷன் தீர்ப்பு'க்கு வேறென்ன பெயர் வைக்கலாம்? 'முதலாளி தாசர்கள் கமிஷன் தீர்ப்பு'—என்று வைத்தால் பொருத்தமாயிருக்கும்!

— அடியார்

தயாராகிறது!

புத்தம் புது முறையில்-தமிழ்ப்
புவனம் வியக்கும் வகையில்

பொங்கல் வாழ்த்துக்கள்

கிடைக்குமிடம்: முத்துவேல் பதிப்பகம்
77, மதுரை ரோடு. திருச்சி-8.

திரைப் படத்தில் கொள்கைப் பிரச்சாரம் வேண்டுமா?

சகோதரர் இராம. அரங்கண்ணல் வசனம் எழுதி இவ் வாரம் வெளிவருகின்ற ஓரியண்டல் மூவிசாரின் ‘பொன் விளையும் பூமி’ என்ற படத்தில் சந்திரபாபு, டி. பாலசுப்ரமணியம் தோன்றும் காட்சி. ஏ. பீம்சிங் இதன் டைரக்டர்.

“நாடகத்திலும் திரைப் படத்திலும் கொள்கைப் பிரச்சாரமா? இது அடுக்குமா? நியாயமா?”

என்று கலங்கித் தவிப்பவர்கள் நிறைந்த இந்த நாட்டில் சென்ற கிழமை ஜெர்மன் டெமாகிரட்டிக் ரிப்பப்ளிக் நாட்டிலிருந்து, “நட்சத்திரங்கள்” என்கிற படம் சென்ற வாரம் மிட்லண்டு தியேட்டரில் திரையிடப்பட்டது உண்மையிலேயே ஒரு வரவேற்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும்.

‘டீபா’ பிலிம் ஸ்டூடியோவில் தயாரிக்கப்பட்ட அந்த அருமையான படத்தின் அடிப்படையே நாஜிகளின் எதிர்ப்புப் பிரச்சாரம்தான்!

ஜெர்மனி இட்லர் ஆட்சியின் கீழ் வந்தபோது ஆயிரக் கணக்கான யூதர்கள் துரத்தியடிக்கப் பட்டார்கள் அல்லவா? அப்படிப் பட்ட யூதர்களில் அழகான யுவதி ஒருத்தி!

நாஜி சிப்பாயாக ஒரு வாலிபன்!

அவர்கள் இருவரும் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன!

யூதர்கள் கூடாரத்தில் பிரசவ வேதனையால் துடித்துக்கொண்டிருக்கிற ஒரு தாயின் உள்ளக் குமுறலை அவனிடம் எடுத்து விளக்குகிறாள், அந்தப் பெண். நாஜிகளின் இருதயத்திலே இரக்கத்திற்கே இடம் கிடையாது என்று குற்றம் சுமத்துகிறாள். முதலில் அவளது துடிப்பான சொற்களைக் கேட்டு வெகுண்ட அந்த வாலிபன், எதிர்பாராத வகையில் மருத்துவருடன் சென்று அந்தத் தாய்க்கு உதவுகிறான்.

யூதப் பெண்களில் இருந்த அழகிய யுவதிகளை மற்ற நாஜி சிப்பாய்கள், தங்களுடைய வாலிப விளையாட்டுகளுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதே குறிக்கோளுடன், கதாநாயகனை ஒரு முறை அந்தப் பெண்ணுடன் சேர்த்து வைக்கிறார்கள், அவர்கள்!

மறுபடியும் அவர்கள் சந்திக்கின்றனர்! தனி இடத்தில் அமர்ந்து உரையாடுகின்றனர். உடலுணர்ச்சி தலைகாட்ட முடியாத அவர்களுடைய உள்ளங்கள் ஒன்றை ஒன்று தழுவுகின்றன!

அவன் சிந்திக்கிறான், தான் யாரென்று!

இதர நாஜிகளைப் போலவே இரும்பு நெஞ்சனாக இருந்த அவன் உள்ளம் கதாநாயகியின் கூட்டுறவிற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நெகிழ்கிறது!

அநியாயக்காரர்களின் அணி வகுப்பிலே தான் இடம் பெற்றிருப்பதை உணர்கிறான்!

—இதை மாற்றிக்கொள்வதற்கு வழி?

சிப்பாய் உடை அணிந்தவாறே எதிர்ப்பாளிகளுக்கு உதவி செய்கிறான். மருத்துவமனையிலிருந்து அவர்களுக்குத் தேவையான மருந்துகளை எடுத்துக் கொடுக்கிறான்.

யூத இனத்தில் பிறந்துவிட்ட காரணத்தால், குழந்தைகள், பெண்கள் என்ற கருணைகூட காட்டாது எல்லோரையுமே சித்திரவதை செய்கிறது நாஜிப் படை! அதுகண்டு அவன் இதயம் துடிக்கிறது. தனி ஒருவன் என்ன செய்ய முடியும்? எதிர்த்துப் போராட இயலாத அவனுக்குக் கிடைத்த ஒரே முடிவு அதுதான்!

—ஆமாம்; நாஜிகளுக்கு அவன் ‘பச்சைத் துரோகி’யாகிறான்!

ஆனால் கொடுமையாளர் கூட்டணியில் இருப்பதாக எப்போது ஒருவன் உணர்ந்து, அதைவிட்டு வெளியே வரமுடியாது—என்பதைத் தெரிந்துகொண்டானோ அப்படிப்பட்டவன் நிச்சயமாக அங்கிருந்தபடியாக நல்லவர் கூட்டத்துக்கு உதவுவது ‘துரோகம்’ அல்ல; உன்னதப் பணி!

—இதுதான் படத்தின் கருத்து!

—இந்தப் படத்தை மட்டும் சென்னை மேயர் தேர்தலுக்கு முன்பு நகராண்மைக் கழக காங்கிரஸ் உறுப்பினர்கள் பார்த்திருந்தார்களேயானால் அவர்கள் அத்தனைபேரும் ஜனநாயகத்தைக் கொலைசெய்து வரும் தங்கள் கட்சி அபேட்சகருக்கு வாக்களிக்காமல் நமது தோழர் அப்துல் காதருக்குத்தான் தங்கள் வாக்குகளைப் போட்டிருப்பார்கள்!

—அவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்கிறது அந்தத் திரைக் காவியம்!

நாடகத்திலும் திரைப் படத்திலும் பிரச்சாரமா — என்று வாயைப் பிளப்பவர்கள் அவசியம் அந்தப் படத்தைப் பார்த்திருந்தார்களேயானால் வாயடைத்துப் போயிருப்பார்கள்!

அதிசயமான ‘சுறுசுறுப்பு’

எதில் சுறுசுறுப்பு இல்லாவிட்டாலும் இந்த மாதிரி விஷயங்களில் நம்மவருக்கு சுறுசுறுப்புப் பிறக்கும். அமெரிக்க நாட்டு அதிபர் ஐசன்ஹோவர் இந்தியா வந்து போவதை இந்திய பிலிம் டிவிஷன் வெகு வேகமாகப் படமெடுக்கப் போகிறதாம். இதில் ஆச்சரியம் தரும் சேதி என்னவென்றால் அவர் வந்துபோன பின்னர் 30 மணி நேரத்திற்குள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் அந்தப் படம் திரையிடப்படும்! அவ்வளவு சீக்கிரம், வேலைகள் நடைபெறுமாம்! என்னவிருந்தாலும் அவர் இந்தியாவிற்குப் படியளப்பவர் அல்லவா? இதில் இன்னொரு முக்கியமான சேதி, தயாரிக்கப்படும் படம், வண்ணப் படமாம்!

தேனாற்றங்கரை

ஏ. ஆர். வி. புரொடக்ஷன்ஸ் எனும்பட நிறுவனத்தார் தேனாற்றங்கரை’ எனும்—திரையோவியத்தைத் தயாரிக்கவிருக்கிறார்கள் இப்படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்ரபாணி, எம். என். நம்பியார் ஆகியோர் நடிக்கின்றனர். எம். ஜி. ஆரே இதை டைரக்ட் செய்யவிருக்கிறார் என்பது சிறப்புச் செய்தி.

முதன் முதலாக சந்திரபாபு குணச்சித்திர பாத்திரம் ஏற்று நடிக்கும் சிவகாமி பிக்சர்சாரின் ‘குமார ராஜா’வில், அவர் எம். என். ராஜத்துடன் இப்படித் தோன்றுகிறார். மாறன் திரைக் கதை வசனம் எழுதுகின்ற அப்படத்தின் டைரக்டர் ஜி. கே. ராமு.

‘சகோதரி’

எல்லாக் குடும்பங்களிலும் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளை வைத்து உருவாக்கப்பட்ட ‘சகோதரி’ இம்மாதம் 11-ந் தேதி வெளிவருகிறது. மாறனின் திரைக் கதை வசனத்தோடு கவிஞர் கண்ணதாசனின் பாடல்களோடு பீம்சிங்கின் டைரக்‌ஷனில் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தில் சந்திரபாபு பால்காரனாகத் தோன்றி எல்லோரையும் வயிறு குலுங்க சிரிக்க வைக்கிறார். இந்தப் படத்தில் கண் கலங்க வைக்கும் சம்பவங்களும் நல்ல நகைச்சுவையும் ஏராளம்!

‘பர்க்கா’

ஏ. வி. எம்மில் தயாராகும் ‘பர்க்கா’ என்னும் இந்திப் படம் விரைவில் திரையிடப்பட இருக்கிறது. முன்பு தமிழில் வெற்றி வாகைசூடிய ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ கதையைத் தழுவிய இந்தப் படத்தில் பெரும்பாலும் பிரபலமடையாத நடிகர்களே நடிக்கின்றனர். கிருஷ்ணன் பஞ்சுவின் திறமையான டைரக்‌ஷனில் உருவாகும் இந்தப் ‘பர்க்கா’விற்கு நேரடியான தமிழ் மொழி பெயர்ப்பு ‘பருவமொழி’ என்பதாகும்.

முன்பு “பாபி”யைப் போல இந்தப் படமும் பெருவெற்றி தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாய் மகளுக்குக் கட்டிய தாலி.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியமான ‘தாய் மகளுக்குக் கட்டிய தாலி’ மிகத் துரிதமான தயாரிப்பில் இருந்து வருகிறது. புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் இப் படப்பிடிப்பில் அதிகமாகக் கலந்து கொள்கிறார்கள். சகோதரர் அரங்கண்ணல் வசனமமைத்து நண்பர் ஆர். ஆர். சந்திரன், டைரக்ட் செய்யும் இப்படம் இத் திங்கள் 25-ந் தேதி வெளிவர பெரு முயற்சி எடுக்கப்படுகிறது!

கலப்படம்...

[11—பக்கத் தொடர்ச்சி]

களிலும் அவரைப்போன்ற ஒரு அரசியல் வாதி தோன்றவே முடியாது.

யாரவர்? அரசியல் அறிஞரா? நோபல் பரிசுபெற்ற தத்துவ ஞானியா? அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்களை விரும்பியழைத்த காங்கிரசு அரசாங்கத்தின் ஒரு அம்சம்தான் இவர். காமராசர் அவரது பெயர். அவரது பெருமை போத்தலில் ஒரு 'டோஸ்' கீழேயிருப்பது.

நீங்களும் தேர்தலில் நின்றீர்கள். எதிர்க்கட்சிகளைப் பற்றிப் பேசினீர்கள். அவரும்தான் பேசுகிறார்; கொஞ்சம் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு, இதயத்தைத் தூக்கி அப்புறம்வைத்துவிட்டுக் கேளுங்கள்:

"இந்த எதிர்க்கட்சிக்காரருக என்ன செய்ருக? எதைப்பற்றியும் குறை கூறிக்கொண்டே இருக்கருக. அதிலும் இந்த தி.மு. க-வுக்கு என்ன தெரியுது? கொடி கட்டத் தெரியுது. மரத்திலே ஏறி உயரமா கொடி கொடியா கட்ருக. இந்தக் கட்சிக்கு நாட்டிலே, அவர்கள் சொல்கிற மாதிரி, செல்வாக்கு இருக்குதா? அப்படியெல்லாம் செல்வாக்கு பிரமாதமாக இல்லை. படிச்சவங்க தான் அவர்களை ஆதரிக்கிருக. வேறு யார் ஆதரிக்கிரு?"

நீங்கள் சிரிக்கும் ஒலி எங்கள் காதில் விழுகிறது. இப்படியுமா ஒரு முதலமைச்சர் பேசுவது — என்று நீங்கள் எண்ணலாம். என்ன செய்வது? எங்களுக்கு வாய்த்தது அப்படி வாய்த்துவிட்டதே? முதலில் கொடி கட்டுபவர்கள் என்ருர்; பின்னர் படித்தவர்கள் என்கிருர். படித்தவர்களைக் கொடி கட்டவைத்துவிட்ட நல்ல கட்சி—என நீங்கள் எண்ணலாம்

அதோடு நாங்கள் சவால்விட்டுக் கூறுகிருேம். எங்கள் காமராசரைப் போல் அரசியல் அதிமகா மேதை உலகில் உண்டா?- என்று! ஏன்? ஐசன்ஹோவரே! உங்களுக்கே அறைகூவல் விடுக்கிருேம். எங்கள் பச்சைத் தமிழர் காமராசரைப் போல் இவ்வளவு 'பச்சை'யாகப் பேச முடியுமா உங்களால்?

என்னை-என் கட்சியை ஆதரிப்பவர்கலொல்லர்ம் படிப்பாளிகளல்ல; பாமரர்கள்; முட்டாள்கள்; எழுத்தறிவற்றவர்கள் — என்று உங்களால் வாய் கூசாது கூற முடியுமா? ஏன் சிரிக்கிறீர்கள்? நெஞ்சைத் தொட்டுக் கூறுங்கள். உங்களால் முடியுமா?

வருகிறதே வருகிறீர்கள், அரசியல் வரலாறு கண்டிராத இந்த மேதையையும் அவர் ஆட்சி செய்யும் நாட்டையும் கண்டிப்பாகப் பார்த்துவிட்டுப் போங்கள்.

தங்களன்புள்ள,

இந்திய யூனியன் எனும் துணைக் கண்டத்தில் அகப்பட்டுக் கொண்ட

குடிமக்கள்.

'கல்வி'

★

ஆங்கிலம், எளிய தமிழ் விளக்கத்துடன் எழுதவும், படிக்கவும், பேசவும் ஒரே வருடத்தில் தபால் மூலம் கற்க மாதம் ரூ. 2. விபரங்கள் இலவசம்.

தி நியூ கல்வி அசோசியேஷன்,

திருப்பூர்.

(கோவை மாவட்டம்)



மனிதனின் கதை...

[2—பக்கத் தொடர்ச்சி]

பட்ட 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம்!' என்ற கோஷங்களை வீண் கூச்சல் என ஒதுக்கித் தள்ளிவிட்டு அந்த அறிக்கை கோருவதாவது:

1. நிலம் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அரசாங்கச் செலவுக்கு வைத்துக் கொள்ளவேண்டும். 2. வருமான விகிதப்படி வருமான வரி விதிக்கப்படவேண்டும். 3. தனி நபர் சொத்துரிமை ஒழிக்கப்படவேண்டும். 4. பண நிர்வாகம் செய்யும் பாங்கிகளும், போக்குவரத்து சாதனங்களும் அரசாங்க உடமையாக்கப்பட வேண்டும். 5. பெருந் தொழில்கள் படிப்படியாக அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ்க்கொணர வேண்டும். 6. விவசாயிகளின் ஆலைத் தொழிலாளர்களின் ஐக்யம் உருவாக்கப்பட வேண்டும். 7. எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி வசதி இருப்பதோடு, ஆலைகளில் அவர்கள் கூலிகளாக நியமிக்கப்படுதல். ஒழிக்கப்படவேண்டும்.

"சமுதாயத்தின் பழைய வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டம் தவிர வேறல்ல" என ஆரம்பிக்கும் கம்யூனிஸ்ட் அறிக்கை, "கம்யூனிஸ்டுகள் தங்கள் கொள்கைகளையும் அதை நிறைவேற்றக் கடைப்பிடிக்கும் நோக்கங்களையும் மறைக்க வேண்டியது அனுவசியம். பலாத்காரப் புரட்சியால் மட்டுமே இந்த சமுதாயத்தை மாற்றியமைக்க முடியும் என்பதை அவர்கள் பகிரங்கமாகவே தெரிவிக்கிருர்கள். கம்யூனிஸ்ட் புரட்சியைக்கண்டு ஆட்சியாளர்கள் அஞ்சி நடுங்கட்டும்! அதனுல் பாட்டாளி மக்கள் தங்கள் அடிமைத்தளை தவிர வேறெதையும் இழக்க வேண்டியிருக்காது. உலகத்தையே அவர்கள் தங்கள் உடமையாகப் பெறுவார்கள். உலக நாடுகளிலுள்ள தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்!" என்ற வேண்டுகோளோடு அந்த அறிக்கை முடிவடைகிறது.

இதன் விளைவாக 1848-ஆம் ஆண்டில் பற்பல நாடுகளில் புரட்சிகள் தோன்றின. ஆனுல் அவையனைத்தும் ஓராண்டுக்குள் ஒடுக்கப்பட்டன. மார்க்ஸ், அதற்குப் பிறகுதான் லண்டனில் நிரந்தரமாகத் தங்கி, 1867-ல் 'மூலதனம்' என்ற நூலை ஏஞ்சல்சுடன் சேர்ந்து வெளியிட்டார். மார்க்சின் கருத்திக்கள் 'மார்க்சிசம்' என அழைக்கப்படலாயிற்று. மற்ற விவரங்களை 'மார்க்சிசம்' என்ற தலைப்பில் எனது அடுத்த கடிதத்தில் தொடருவேன்.

அன்புள்ள,

அகத்தியன்.

கலப்படம்

இந்திய 'ஐக்கியம்' காண ஐக் அவர்களே; வருக!

உயர்திரு ஐசன்ஹோவர் அவர்களுக்கு,

தாங்கள் இந்தியத் துணைக் கண்டத்துக்குப் புறப்பட்டு வருவதுகண்டு மட்டில்லா மகிழ்ச்சி கொண்டோம். உங்கள் அமெரிக்கநாடு பெருமை கொள்கிறது, உங்களைப் போன்ற வீரர்கள் நாட்டுத் தலைமை ஏற்றதால்! நாங்கள் அப்படிப் பெருமை கொள்வதற்கில்லை. எங்கள் பிரதம மந்திரி போர்வீரர் இல்லையென்றாலும் ஒரு விஷயத்தில் பெரியவீரர். அவர் பேச்சில் உங்களை விடப் பெரிய சூரர். என்ன நேருவைப் பற்றி இப்படிக் கூறுகிறோம்—என்று நினைக்காதீர்கள். நாங்கள் அவருக்கு இப்படிப் பட்டம் தருவதைவிட அதிகமான பட்டங்களை எங்கள் பண்டிதரே ஏற்றுக் கொள்வார். தன்னை 'நாடோடி' என்று கூட கூசாது கூறிக் கொள்வார். நம்மால் முடியுமா? 'க்ஷணபித்தம் — க்ஷண சித்தம்' என வடமொழியில் கூறுவார்களே அதை நிரூபிக்கப் பிறந்தவர் எங்கள் நேரு. திடீரென்று ஒருவரை நல்லவர்—என்பார். மறுவினாடியே 'நாட்டுக்குத் தீங்கிழைப்பவர்'—என்பார். இந்த ரசமான தகவல்களையெல்லாம் உங்கள் சுற்றுப்பயணத்தின் போது அனுபவிப்பீர்கள்.

நீங்கள் இந்தியாவிற்கு வருவதற்குமுன் ஏதேதோ நாடுகளையெல்லாம் பார்த்துவிட்டு வருவீர்கள். அந்த நாடுகளைவிட உங்களை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கப் போவது எங்கள் நாடுதான்.

நேரு உங்கள் அமெரிக்க நாடு வந்தபோது தொழிற்சாலைகளைக் காட்டினீர்கள்; வானத்தைத் தொடும்கட்டிடங்களைக்காட்டினீர்கள். வளங் கொழிக்கும் கழனிகளைக் காட்டினீர்கள். ஆனால் நாங்கள் காட்டப் போவது என்ன தெரியுமா? இந்தியாவைக் காண வருகின்ற வல்லரசுத் தலைவராகிய உங்களுக்குக் காண்பிக்கப் போகும் அதிசயப் பொருள் என்ன தெரியுமா?

நாய்! என்ன திகைக்கிறீர்கள்? நாயைத்தான் காட்டப் போகிறோம். அப்படி உயர்ந்த ஜாதி (அதாவது அதிகக் கொழுப்பு பிடித்த) நாயா அது?—என்றால், அதுவும் இல்லை!

சென்னையிலிருந்துவரும் துப்பறியும் நாயைக் காண்பிக்கப் போகிறோம். நாயைக்கொண்டு துப்பறிய வேண்டிய அவசியம் என்ன? ஐந்தறிவுள்ள பிராணியைக்கொண்டு ஆறறிவுள்ள உயிர் செய்யும் குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் என்ன நேர்ந்துவிட்டது? நிமிடத்திற்கு ஒரு துப்பாக்கி வேட்டு எழுகின்ற எங்கள் நாட்டில்கூட இந்த முறை இல்லையே—என்று நீங்கள் எண்ணலாம்!

அல்லது இந்த நாட்டில் அவ்வளவு குற்றங்களா? குற்றம் புரிகிற அளவுக்கு மக்கள் அவ்வளவு தாழ்ந்தவர்களா? தாழ்ந்த நிலையில் மக்களை அழுத்தி வைத்திருக்கும் அளவிற்கு அரசு அவ்வளவு மோசமானதா? இத்தகைய மோசமான அரசின் அழைப்பை ஏற்று நாம் இங்கு வந்தோம்—என்றும் உங்கள் சிந்தனை சக்கரத்தைச் சுழற்றிவிடலாம்.

'எப்படியோ இங்கு வந்து விட்டீர்கள், விருந்துக்கு அழைத்தவரின் வீட்டிலுள்ளதைச் சாப்பிட்டு விட்டுப் போங்கள்' — இப்படி உங்களை விட்டுவிட மாட்டார்கள் எங்கள் அரசினர்.

உள்நாட்டில் மக்கள் உருக்குலைந்து திரிந்தாலும், வெளிநாட்டுத் தூதுவர்களின் உல்லாசச் செலவிற்கு அள்ளியள்ளித் தந்த எங்கள் அரசு உங்களுக்கு செலவழிக்காமலா விட்டு விடுவார்கள்?

சாதாரண மந்திரிகள் வந்தால் ஆயிரம், மத்திய மந்திரிகள் வந்தால் பத்தாயிரம், பிரதமர் வந்தால் லட்சம். இப்படிச் செலவு பட்ஜெட் போட்டு வைத்திருக்கும் எங்கள் அரசு உங்களுக்கு செலவு செய்யாமலா விட்டுவிடும்? லட்சக் கணக்கில் வரிப்பணத்தை வாரியிறைக்கப் போகிறது; பார்த்துக் கொண்டே இருங்கள்!

இவ்வளவு செலவு செய்து உங்களை இங்கே 'தருவிப்பது' எதற்கு என்று உங்களுக்குப் புரிந்திருக்கும். சீனா வேறு தொந்தரவு செய்து கொண்டே இருக்கிறது. எப்போதும் நியாயம் பேசித் திரியும் ரஷ்யா கூட இப்போது வாய்மூடி மௌனியாகிவிட்டது. இப்படி உங்களை அழைத்து வந்து 'ஷோ' காட்டினால்தான் அந்த 'நபர்'களுக்கு மனதில் அச்சம் விழும். வலிந்து வலிந்து உங்களை அழைப்பதன் காரணத்தை இப்போதாவது நீங்கள் புரிந்திருப்பீர்கள்!

நீங்கள் ஏன் இவ்வளவு சீக்கிரம் பறந்தோடி வருகிறீர்கள் என்பதும் எங்களுக்குப் புரியும். சீனாவுக்கு அடுத்தபடி மக்கள் தொகை அதிகமுள்ள அரசு இந்தியா. அதன் ஆதரவைப்பெற்று முடிந்தால் பொருளாதார ஆதிக்கத்தைப் பரப்பிட நீங்கள் நினைக்கிறீர்கள்.

பாவம். நீங்கள் இந்தியாவைப் பற்றி சரியாக அறியாதவர்கள். அதை ஒரு நாடு என்று கருதிக் கொண்டிருந்தால் இந்தப் பூமியில் ஒரு கால்வைத்தவுடனேயே அந்த எண்ணம் தூளாகிவிடும். இங்கு எத்தனைவிதமான இனங்கள், எத்தனைவிதமான நம்பிக்கைகள் — என்பதை உணர்ந்து கொள்வீர்கள்.

உங்களுக்கு அணிவகுப்பு மரியாதை நடைபெறும்போது கொஞ்சம் கூர்ந்து கவனியுங்கள். ராணுவ வீரர் என்றால் உங்கள் நாட்டில் ஆளுக்கு ஆள் அழகு மாறியிருக்கும். ஒரேவிதமாய் இருப்பார்கள்; உடலும் ஒரே அமைப்புள்ளதாயிருக்கும்.

'ஆனால் இங்கே...மனிதருக்கு மனிதர் உடலும் உருவமும், மாறுபடும். சப்பை மூக்கர்களும், 'அளவு மீறும் மூக்கர்'களும், நெட்டையர்களும் குள்ளர்களும் அப்பப்பா...ஒரு குட்டி சர்வதேசப் படையைப் பார்ப்பது மாதிரி இருக்கும்! இதுமட்டுமா எல்லா வீரர்களும் தொப்பி வைத்திருப்பார்கள்—என்று எண்ணாதீர்கள். சிலர் 'சாய்ந்துபோன நேரு தொப்பி' வைத்திருப்பார்கள். இன்னும் சிலர் தாடி வளர்த்து, குடுமி வளர்த்து முண்டாசு கட்டியிருப்பார்கள்!

வேற்றுமைகள் இந்த அளவோடு நின்றுவிடாது. ஊர்களைச் சுற்றிப் பார்க்க நேர்ந்தால் அந்தந்தப் பகுதியினரின் உணவு, உடை, பண்பு இவைகளைப் பற்றி விசாரித்துப் பாருங்கள். கடகரேகைக்கு சற்று தெற்கே உள்ளவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள முரண்பாட்டை உணர்வீர்கள்.

அந்த முரண்பாடு முற்றி இரண்டு பகுதியும் முட்டி மோதிக் கொள்ளப்போகும் நிலையையும் உணர்வீர்கள். முன்பொரு தடவை உங்கள் நாட்டில் நடந்ததே வடக்கு தெற்கு போராட்டம் — ஏறத்தாழ — அதைப் போன்றதுதான் இதுவும்.

உங்கள் கட்சிக்காரரான ஆபிரகாம் லிங்கன் வடக்கையும் தெற்கையும் ஒன்றுபடுத்தினார், பீரங்கிகளின் துணைகொண்டு! ஆனால் இங்கே ஆபிரகாம் லிங்கனும் இல்லை; பலமுள்ள பீரங்கிகளும் இல்லை.

அன்று வடக்கு—தெற்கு போராட்டத்தில் ஈடுபட்ட நீங்கள் 'நாம் அமெரிக்கர்'—என்ற நினைப்பிலிருந்தீர்கள். இங்கு அப்படியில்லை. அப்போது வடக்கு வென்றது. அமெரிக்கா ஒன்றுபட்டது. ஆனால் இங்கு...தெற்கு வெல்லும்; தனியுரிமை பெறும்!

இதெல்லாம் நடவாத காரியம்—பகற் கனவு—என்று கூறுகின்றவர்கள் சிலர் இந்த நாட்டிலே இருக்கிறார்கள்! பொதுவுடைமை பேசுபவரிலிருந்து தனியுடைமைக்குத் தனியாக ஒரு கட்சி ஆரம்பித்தவர் வரை இதை எதிர்க்கிறார்கள். காங்கிரசிலிருந்து 'கூட்டத்திற்கு ஆள் சேர்க்கும் கட்சி' வரை எதிர்ப்புக் காட்டுகிறார்கள்.

இவர்களில் தலைமையானவர் ஒருவர் இருக்கிறார். அவரை நீங்கள் கண்டிப்பாகப் பார்க்கவேண்டும். அத்தகைய பேரறிஞர் அவர். நீங்களும், குருசேவ் உட்பட எத்தனையோ ராஜதந்திரிகளைப் பார்த்திருக்கிறீர்கள். ஆனால் இவரைப்போல் ஒருவரை உங்கள் ஆயுளில் பார்க்க முடியாது. ஏன், யுகயுகாந்திரங்

[தொடர்ச்சி பக்கம்—10]

அண்ணா பேச்சில்...

"இந்த முறையும் நமது தோழர்கள் மேயராகவும், துணை மேயராகவும் வெற்றி பெற்றது, நமக்குப் புதிய வலிவையும் பொறுப்பையும் தந்திருக்கிறது.

"நம்முடைய தோழர்கள் 45 பேரும் கட்டுப்பாடு குலையாமல் உறுதியாக நின்று, காங்கிரசுக்காரர்களின் தகாத முயற்சியினைத் தகர்த்தெறிந்தமைக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். இதை வெளிப்படையாகச் சொல்லுவதிலே வெட்கப்படவில்லை. ஏனென்றால், நம்முடைய 45 தோழர்களும் வாலிபர்களாக உள்ளவர்கள். வாலிபர்கள் சுலபத்தில் ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டுவிடக் கூடியவர்கள்; மிரட்டினால் மிரளக்கூடியவர்கள்; சிரித்தால் மயங்கக்கூடிய பருவத்தினர்; அதனால்தான் மாற்றார்கள், நம்முடைய தோழர்கள் சிலரை, தம் பக்கம் இழுத்துவிடலாம் என்று எண்ணினர்.

"அதனால் நான்கூட, பிள்ளை பிடிப்பவனை எண்ணிப் பயந்திடும் தாயைப்போல—'எந்த மந்திர மாயத்தால் நம் பிள்ளையைப் பிடித்துச் சென்றுவிடுவானோ என்று அஞ்சுவது போல—நானும், 'நம்முடைய தோழர்களுக்கு என்னென்ன கதி நேருமோ' என அஞ்சினேன். ஆனால், இப்பொழுது தெரிந்துகொண்டேன்—'நம்முடைய பிள்ளைகள் சுலபத்திலே பிடிபட்டுவிட மாட்டார்கள்; தூக்கி இடுப்பிலே வைத்தால், மடியிலே இருப்பதை எடுத்துக்கொண்டு வருவார்களே தவிர, மயங்கி ஏமாந்துவிட மாட்டார்கள்'—என்று!

"நம்முடைய தோழர்கள் கொள்கையிலே எவ்வளவு உறுதிகொண்டவர்கள் என்பதை அறிந்துகொள்ளாததால்தான், மாற்றுக் கட்சியினர், நம்முடைய தோழர்களைப் பற்றித் தப்பாகக் கணக்குப்போட்டுத் தகாத வழிமுறைகளைக் கையாண்டனர். நம்முடைய தோழர்களெல்லாம் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள் என்பதனால்தான் தட்டிக்கொடுத்துப் பார்த்தார்கள். என்னென்னமோ செய்து பார்த்தார்கள். தேர்தல் முடிந்த பிறகுதான், பயம் காட்டியோ, ஆசை காட்டியோ, தி. மு. கழகத் தோழர்களை அசைக்கவோ, இழுக்கவோ முடியாது என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

"மேயர் தேர்தலில் வெற்றி பெற்றதைவிடப் பெரிய வெற்றியாக—இந்த உறுதி மனப்பான்மை பெற்றிருப்பதைத்தான் நான் பாராட்டுகிறேன். இந்த உறுதி இருந்தால்தான் நாம் எதிர்காலத்தில் நல்ல முறையில் பணியாற்றி வெற்றி பெறமுடியும்"

[6-ந்தேதி மாலை சென்னை நேப்பியர் பூங்காத் திடலில் மேயர் துணைமேயர் ஆகியோருக்கு நடந்த வரவேற்புப் பொதுக் கூட்டத்தில் பேசியது.]

நீட்டோலை

மு. கருணாநிதி

தளி ஈன்ற தளிர்!

போர்க்களத்தில் தலைவனும், தந்தையும் இறந்துபட்டனர் எனச் செய்தி கேட்டு இளமகனை அழைத்து எண்ணெய் நீவி தலை முடித்துக் கவசம் அணிவித்துக் கரங்களில் வாள் எடுத்துக் கொடுத்து "சென்றுவா மகனே செருமுனை நோக்கி!" எனத் தன் கடைசிச் செல்வத்தையும் களத்திற்கு வழி அனுப்பி வைத்த தாயின் வீரங்கூறும் புறநானூற்றுச் செய்யுளைப் படித்துப் பெருமையடைந்திருக்கிறோம். ரத்தச் சகதியிலே தன் கண்மணியை நடமாட விடுவதற்கு அந்தத் தாய்க்கு எத்துணை நாட்டுப் பற்றும், வீரமும் இருந்திருக்க வேணடுமென்று வியப்படைந்திருக்கிறோம். தாய் தான் துணிந்து அனுப்பிவைத்தாள்—சேயும் வாளேந்திப் போர் முனைக்குப் புறப்பட்டதே என நினைக்கும்போது உடம்பெல்லாம் புல்லரிக்கிறதல்லவா?

விளையாட்டுக் கருவிகளைத் தூக்கிப் பழக்கப்பட்ட கரம்—வேடிக்கைகளைக் கண்டு மகிழ்ந்த கண்கள்—விநோத ஒலிகளால் கவரப்பட்ட காதுகள் — வீதிப் புழுதியில் ஒடியாடிய கால்கள்—அந்தப் பிஞ்சு மகன், கரத்திலே வேலேந்தி, களத்திலே உருண்டு கிடக்கும் தலைகளையும் முண்டங்களையும் கண்டு அஞ்சாது—"அய்யோ! அம்மா! விடாதே! கொல்! விரட்டு!" என்ற அவல ஒலிகளைக் கேட்டுக் காதைப் பொத்திக் கொள்ளாமல்—எதிரிகளைச் சந்திக்கத் துடித்து நடக்கிருன் என்ற காட்சி இப்போது கூட அகக்கண்ணிலே தெரிகிறது.

இளைஞன் நெடுஞ்செழியன், தன் அரும்புக் கரங்களில் கொலை வாளைத் தாங்கித் தலையாலங்கானப் போரில் குதித்து வெற்றி பெற்ருன் என்ற வரலாற்று உண்மை கேட்டு நம் இதயம் பூரிப்பால் விம்முகிறது. கண்களிலே புது ஒளி தோன்றுகிறது.

ஆற்றல் மிகுந்த நமது மூதாதையர், முற்றிய பருவத்திலும் முனையிலும் காட்டிய வீர உணர்ச்சியைத் தமிழகத்திலே மீண்டும் காண்போமா என்ற ஏக்கம் நம்மை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிற நேரத்திலே தான் நண்பா; நாம் பெருமிதங் கொள்ளவும் அந்தப் பெருமிதத்தினிடையேபெருகிவரும்வேதனையால் கண்ணீர் வடித்திடவுங் கூடிய நிகழ்ச்சியொன்று நடைபெற்றிருக்கிறது.

கோவை மாவட்டத்திலே இரண்டொரு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகஇரண்டு கிழமைகட்கு முன்பு சென்றிருந்தேன். மாவட்டச் செயலாளர் உடுமலை நாராயணனும்கோவை ராசமாணிக்கமும் அந்த நிகழ்ச்சிகளை மாவட்டத்தில் ஏற்பாடு செய்திருந்தனர்.

மாலை 6 மணிக்கு உடுமலைப் பேட்டையில் கூட்டம் துவங்கியது. நான் பேசி முடிக்கும் போது இரவு மணி ஒன்பது! நல்ல காய்ச்சலுடன் கம்பளிச் சொக்காய் போட்டுக்கொண்டு, கிழவனைப்போல போர்த்திக் கொண்டுதான் அந்தக் கூட்டத்தில் பேசி முடித்தேன். அந்தக் கூட்டம் முடிந்ததும் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என்ற துடிப்புடன் எங்கே போய்த் தங்கலாம் என்று அவசரமாகவும் பரபரப்புடனும் கேட்டேன்.

"இன்னெரு கூட்டம் இருக்கிறதே!" என்ருர்கள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இந்தக் காய்ச்சலுடன் எப்படி இன்னெரு கூட்டத்தில் பேசுவது என்று திகைத்தேன்.

"இல்லை அது மிக முக்கியமான கூட்டம் — நீங்கள் அவசியம் பேசித்தான் தீர வேண்டும்!" என்ருர்கள்.

"மிக முக்கியம்" என்ற வார்த்தைக்கு நமது தோழர்கள் கூட்டம் நடத்துவதற்காக வழக்கமாகக் கூறுகிற பொருள்தான் இருக்குமென்று நான் கருதினேன்.

ஆனால், தோழர்கள் நாராயணனும் ராசமாணிக்கமும் அந்த "மிக முக்கியம்" என்பதற்குக் கூறிய விளக்கம் கேட்ட பிறகு என் கண்கள் கலங்கிவிட்டன. நெஞ்சு அடைத்துக் கொண்டது. என்னையும் மீறி என் கை கால்கள் நடுங்கத் தொடங்கின.

நண்பனே! அந்த 'மிக முக்கியம்' என்ற வார்த்தையில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களும் கண்ணீரால் எழுதப்பட்டவை.

தளி எனும் சிற்றூர் உடுமலைக்கு அருகே பத்துக் கல் தொலைவில் உள்ளது. அங்கே ஆறுமுகம் என்ற இளைஞன்—பனிரெண்டு ஆண்டுகள்கூட சரியாக முடியவில்லை. அவன் பிறந்து! அழகு ததும்பும் முகம்—ஆர்வம் படைத்த விழிகள்—துடிப்பு நிறைந்த உடற்கட்டு—சுருக்கமாக அவன் ஒரு சிங்கக் குட்டி! அவன் தலைமையிலே ஒரு இளைஞர் அணி வகுப்பு. அந்தப் படையிலேயுள்ள பாலகர்க்கு—.

'திராவிடம்' எனும் சொல் தித்திக்கும் தேன்!



அண்ணா என்ற வார்த்தை கற்கண்டு!

கழகம், கனிச் சாறு!

படித்தனர்—கழகப் பணி புரியவும் துடித்தனர். அருமை நண்பர் மதியழகன் தேர்தலில் நின்ற போது தளியில் கிடைத்த வாக்குகள் அவருக்கு இருநூற்று ஐம்பது! காங்கிரசுக்கு நூற்றி இருபது! அந்த இருநூற்றி ஐம்பதுக்கும் காரணம் அந்த ஆறுமுகமெனும் அரும்புதான்! சிந்தனை—பேச்சு—செயல்—எல்லாமே திராவிட நாட்டு விடுதலைதான், அந்த வீர மகனுக்கு!

கொடி பறக்கவிட மரத்தினிலே ஏறினனும் ஒரு மாதத்திற்கு முன்பு! அந்தக் கொழுந்தினைத் தாங்காது மரம் அவனை கீழே தள்ளிவிட்டது. பலத்த காயம். பேச்சு மூச்சில்லை. மருத்துவமனையில் பிரக்ஞையற்றுக் கிடந்தான் அந்தத் தங்க இளைஞன். வட்டக் கழகச் செயலாளரும் மற்றவர்களும் விரைந்தோடினர். ஊரே திகில் கொண்டு நின்றது. பெற்ற தாய் வடித்த கண்ணீர் அவன் காயத்திற்கு மருந்தாகவில்லை. ஊர் மக்களின் துடிப்பு அவனைக் காப்பாற்ற உதவிடவில்லை.

"வாய் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டானு?" என்று கழக வீரரெல்லாம் காத்துக் கிடந்தனர்.

சாவதற்கு சில நிமிடங்களே மிச்சமிருக்கின்றன. நிச்சயம்.

[தொடர்ச்சி பக்கம்—7]

பொங்கல் மலர்

எண்ணங்களை எழுதுங்கள் !

முரசோலி பொங்கல் மலரை திராவிடம் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்பதை நாமறிவோம். அதன் சிறப்புகள் என்ன; என்ன—என்ற விளக்கங்கள் தரத் தேவையில்லையென்றே கருதுகிறோம்.

"முரசோலி — பொங்கல் மலர்"—இந்தச் செய்தியே உங்களுக்கு இனிப்பூட்டக்கூடியது — மலர் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற எண்ணங்களை எழுதுங்கள் — இயன்றவரை செயலாற்றி உங்கள் சிந்தை மகிழ வைக்கிறோம்—அத்துடன்,

மலர் எவ்வளவு ரூபாய் விலையில் வெளியிடலாம் என்ற கருத்தையும் உடன் எழுதுங்கள். இது மிக முக்கியம்; உடன் தெரிவியுங்கள்.

[கடிதம் எழுதுவோர் முழு முகவரி தர வேண்டுகிறோம்.]

பொறுப்பாளர்,
பொங்கல் மலர்,
"முரசோலி",
சென்னை—6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம் 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6, தமிழ்நாடு